தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, சித்திரை 25 (7-5-'60). சனிக்கிழமை | இதழ் 47

குழப்பம்: இங்கேயா? அங்கேயா?

அன்புள்ள தோழரே!

வணக்கம். "தென்றல்"லில் நிறைய எழுதவேண்டும் என்கிற ஆசை எனக்கு அதிகம். ஒவ்வொரு நாளும் "அதைப் பற்றி எழுதவேண்டும்! இதைப்பற்றி எழுதவேண்டும்!" என்றெல்லாம் திட்டமிடுகிறேன். இருப்பினும் பல்வேறு வேலைகள், எழுத்து நேரத்தை விழுங்கி விடுகின்றன. இதில் எல்லோருக்கும் நல்லவராக இருக்க முயலும் ஆபத்தும் சேர்ந்துவிடுகிறது. மடாதிபதிகளைப்போல், மடத்தின் வாசலிலே ஒரு காவல்காரனை வைத்து, "யாரையும் பார்ப்பதற்கில்லை!" என்று சொல்லிவிடுவதாயிருந்தால் கவலையில்லை. நானோ, வேலை, உதவி, கூட்டத்திற்குத் தேதி என்கிற முறையில் யார் வந்தாலும் உட்கார வைத்து, முகங்கொடுத்துப் பேச வேண்டும் என்ற ஆசை உடையவன். கட்சியில் ஈடு இணையில்லாத தியாகங்களைச் செய்ய முடியாவிட்டாலும், "பார்க்கவரும் தோழர்களை அலட்சியப்படுத்தாதவன்" என்கிற பெயரையாவது பெற வேண்டும் என்கிற எண்ணங்கொண்டவன். அதனால் நேரத்தில் பெரும்பகுதி உரையாடுவதிலேயேகழிந்துவிடுகிறது.

இருப்பினும், பத்திரிகையில் எழுதுவது கட்டாய ஊழியமாகிவிட்டபடியால், அடிக்கடி உங்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெறுகிறேன். அண்மையில் நான் கலந்துகொண்ட கூட்டங்களில் சில உற்சாகமான சூழ்நிலைகளைக் கண்டேன். கூட்டத்துக்கு நாள் கேட்க வருகின்றவர்கள் எப்படிப்பட்டவர்கள், என்ன தொழில் செய்துகொண்டிருக்கின்றவர்கள், எப்பொழுது இயக்கத்துக்கு வந்தவர்கள் என்பவற்றையெல்லாம் அறிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றேன்.

'பாண்டியநாட்டில் ஒரு கிராமத்தின் வழியாகக் காரில் நான் வந்துகொண்டிருந்தபோது, காரை நிறுத்தும்படி கை காட்டினார் ஒருவர். தோளிலே கலப்பை தூக்கியிருந்தார். வலதுகையில் இரண்டு மாடுகளைப் பிடித்துக்கொண்டிருந்தார். கிராமத்துக்கே உரிய வகையில் பாதி முடி வைத்திருந்தார். "இந்த விவசாயி நம்முடைய காரை நிறுத்துவானேன்" என்று ஆச்சரியத்தோடு இறங்கினேன். 'என்ன வேண்டும்' என்று கேட்டேன். 'இந்தப் பக்கம் அடிக்கடி போகிறீர்கள்; இந்த ஊருக்கு ஒரு தேதி கொடுக்கக்கூடாதா?' என்றார். 'நீங்கள் யார்?' என்றேன். 'நான்தான் இந்த ஊர்ச் செயலாளர்' என்றார். நான் திகைத்தபடி கொஞ்சநேரம் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். நமது இயக்கத்தைக் கிராமத்து விவசாயிகள் புரிந்துகொள்வதற்கு இன்னும்கூட நாள் பிடிக்கலாம் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் உண்மையில் கனவில் நடப்பதுபோல் நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் கண்டேன். அவசியம் நாள் தருவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டேன்.

மற்றொருநாள், சென்னையிலிருந்து திருச்சி செல்லும் பெரிய சாலையில் ஒரு இடத்தில் என் காரின் 'டைனமோ' பழுதாகிவிட்டது. சுற்றிலும் வீடுகளே இல்லை. வயலுக்கு நடுவே ஒரே ஒரு குடிசை மட்டும் கண்ணுக்குத் தெரிந்தது. அங்கிருந்து தண்ணீர் வாங்கிக் கொண்டுவரச் சொன்னேன். தண்ணீரை எடுத்துக்கொண்டு அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரரே ஓடிவந்தார். தண்ணீரைக் கொடுத்துவிட்டு மீண்டும் ஓடினார். ஒரு பாத்திரம் நிறையக் காய்கறிகளைக் கொண்டு வந்தார். 'இங்கேயே சாப்பிடுங்கள்' என்றார். எனக்கே வியப்பாக இருந்தது. காட்டிலே ஒரு குடிசை! அந்தக் குடிசையிலும் ஒரு கழகத் தோழர்!

சாதாரணமாக வெகு தூரங்களில் உள்ள ஊர்களுக்குப் பயணம் போவது தென்றல் எனக்கு மிகவும் தொல்லையாக இருக்கும். என் உடல் நிலைக்கும் அது ஒத்து வருவதில்லை. எனினும், இப்படிப்பட்ட தோழர்களை அடிக்கடி பார்க்கின்ற உற்சாகத்தால், அலுப்பில்லாமல் பயணம் போனேன். கடந்த நான்கு மாதங்களில் தினமும் பேசினேன். ஒப்புக்கொண்ட கூட்டங்களில் இரண்டைத்தவிர பாக்கி அனைத்திலும் கலந்துகொண்டேன். காரில் ஏற்பட்ட கோளாறின்விளைவாகக் கொரடாச்சேரிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. கடலூரைத் தாண்டியதும் கார் பழுதுபட்டுவிட்டது. எனது அருமை நண்பர் கடலூர் வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி அவர்கள் ஆட்களை அழைத்து வரச் செய்து இரவு பன்னிரண்டு மணிக்குக் காரைச் சரிசெய்து கொடுத்தார்கள். கொரடாச்சேரியில் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் என்மீது கோபப்பட்டுத்தான் திரும்பியிருப்பார்கள். மறுநாள் பரமக்குடி, காரைக்குடி, குருவிக்கரம்பை ஆகிய மூன்று ஊர்களிலும் பேசுவதாக ஏற்பாடு. ஒரே நாளில் மூன்று கூட்டங்கள் என்னும்போது தூரம் குறைவாக இருக்க வேண்டும். ஆனால், நான் ஒப்புக்கொண்டதில் ஏற்பட்ட தவறுதலின் விளைவாக பரமக்குடியிலும், காரைக்குடியிலும் மட்டுமே பேச முடிந்தது. குருவிக்கரம்பையில் கலந்து கொள்ள இயலவில்லை. இந்த இரண்டு குறைகளையும் அண்மையில் நிறை செய்ய இருக்கிறேன்.

நான் நிறையக் கூட்டங்களுக்குப் போகிறேன் என்றாலே, பலர் பலவிதமாகக் கேள்வி கேட்பதுண்டு. படத்தொழிலில் இருக்கின்றவர்கள், 'உனக்கு எப்படி ஓய்வு கிடைக்கிறது?' என்கிறார்கள். தூக்கத்திடம் எனக்கிருக்கின்ற மட்டற்ற மதிப்பை உணர்ந்தவர்கள், 'நீ எப்படி விழித்திருந்து பயணம் செய்கிறாய்?' என்கிறார்கள். அரசியலில் சந்தேகம் பிடித்தவர்கள், 'இப்போது மட்டுமென்ன உனக்கு இவ்வளவு சுறுசுறுப்பு?' என்கிறார்கள். இவன் மிகப் பெரிய அளவில் வளர்ந்துவிடுவானோ என்று கருதுகிற 'எதிர்க்கட்சிக் காரர்கள்,' நான் பேசுகிற முறையைக் குறை கூறுகிறார்கள். ஏதோ அளகேசனுக்குப் பதில் சொல்வதற்கென்றே இயக்கத் தோழர்கள், 'கூப்பிடு கண்ணதாசனை!' என்று அலைவதாக அவர்கள் கணக்கிடுகிறார்கள். சரியாகவோ, தவறாகவோ, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவருக்கே இயக்கத்தில் தகுதியுள்ள எதிரி நான்தான் என்று முடிவு கட்டிவிட்டவர்களை வாழ்த்தத்தான் வேண்டும். இரயில்வே துணை மந்திரியாக இருந்தவர், நேருவின் நூலை மொழிபெயர்த்தவர், காந்தியோடு சிறையிலிருந்தவர் என்றெல்லாம் அவர்களால் போற்றப்படும் அவர்கள் தலைவருக்கு, ஒரு சாதாரண கண்ணதாசன் பெரிய எதிரியாகக் கருதப்பட்டால் அது பெருமைக்குரியதுதான். ஆனால் உண்மையில், எந்த ஒரு தனிப்பட்ட காங்கிரசுக்காரருக்கும் பதில் சொல்வதற்காக நான் மேடை ஏறியதில்லை. ஆத்திரமூட்டப்பட்டபோது கடுமையாகப் பேசியிருப்பேன். அந்தக் கடுமை கொள்கையளவில் இருந்தது உண்டே தவிர, தனிப்பட்ட முறையில் இருந்ததில்லை. அறிஞர் அண்ணா அவர்களேகூட எதிரிகளின் மோசமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலையில், கடுமையாகச் சொல்லிவிடுவதைப் பார்க்கிறோம். அந்த வார்த்தைகளையே மூலதனமாக்கிக்கொண்டு எதிர்க்கட்சிக்காரர்கள் அரசியல் தொழில் நடத்துவதையும் பார்க்கிறோம். ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்கள் 'தேடி அலைவதுமில்லை; ....' என்று கிண்டலுக்காகச் சொன்னதை வைத்துக் கொண்டு, 'அளகேசர்'கள் இன்னும் கொட்டமடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வார்த்தைகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதை நான் எப்போதும் மறந்தவனல்ல. வேண்டுமானால் ஆழமான கலை நுணுக்கத்தோடு பேசத் தெரியாதவனாக நான் இருக்கலாம். அரசியல்தெளிவு, மற்றவர்களைவிட என்னிடம் குறைவாகவுமிருக்கலாம். எப்போதும் இயக்கத்தின்

— 12-ம் பக்கம் —

சென்னை அமைச்சரானாலும் தில்லிக்கு அடிமைதானே?

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அத்தனை பேர்களும், ஏகஇந்தியாவின் பெருமைகளைப் பேசுவதற்குத் தயங்கமாட்டார்கள். அவர்களிடத்திலேயுள்ள அரசியல் கருத்து வேறுபாடுகளையெல்லாம் மறந்து ஒதுக்கி வைத்துவிட்டு உரக்கச் சொல்வார்கள். இந்த அகில இந்தியாவின் உள்ளத்தையும் உருவத்தையும் இங்கே நடைபெற்று முடிந்துவிட்ட பல நிகழ்ச்சிகளின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால், இவர்களது ஏலாததன்மையும் ஏமாளித்தனம் நிறைந்த கோமாளிப் பேச்சும் நமக்கு எளிதில் புலப்பட்டுவிடும். நாம் புரிந்து கொண்ட அந்தச் செய்திகளை, பிரிவினையை எதிர்க்கும் அந்தப் பெரிய மனிதர்களுக்குத் தொகுத்துக் காட்டுவோம். அகில இந்திய ஒற்றுமைக்கு எத்தனையோ உளுத்துப் போன வாதங்களைக் காட்டி அலுத்துப் போன பிறகு, அகில இந்தியக் காங்கிரசின் அண்மைக் காலத் தலைவரும் அடுத்த முறையும் தொடர்ந்து பதவியிலிருப்பாரா என்ற ஐயத்துக்குரியவருமான சஞ்சீவியார் தமிழ் நாட்டிலே பெரிய சுற்றுப்பயணம் என்று சொல்லி, இராசபாளையம் - மதுரைக் கூட்டங்களிலே பேசிவிட்டுப் போயுள்ளார். முன்னேற்றக் கழகத்தின் விடுதலைக் கொள்கையையும் தனி நாட்டு இலட்சியத்தையும் ஆந்திரத்தின் முதல்வராக இருந்த நாட்களிலேயே நன்கு புரிந்து கொண்டிருந்த அவர், இப்போது புதிய தத்துவம் எனக் கருதிக் கொண்டு தன்னருகேயிருந்த அளகேசன் குரலிலே, "முன்னேற்றக் கழகத்தை நசுக்கிப் பொசுக்கிவிடுவோம்! திராவிட நாட்டுப் பிரிவினை என்பது ஒரு பகற்கனவேயாகும்!" என்று சொல்லியிருக்கிறார். அவசரக்கார அமைச்சர், அறிஞர் பட்டத்துக்கு அலைந்து திரிகிற சுப்பிரமணியம். அவர் சொல்லியிருந்தால் அலட்சியமாக ஒதுக்கித் தள்ளியிருக்கலாம். தென்னக மாநிலங்களின் உரிமைகளைப் பெறுவதற்கு நான்கு மாநிலங்களும் ஒன்றாக இணைந்து போரிட வேண்டும் என்று ஆய்வுரைகளை அன்றோர் நாள் அள்ளி வழங்கியவர் சஞ்சீவியார். அவர் பாடியுள்ள புதிய அகவல் பதவியின் போதையிலே பிறந்ததாக இருப்பதால், அது எண்ணிப் பார்க்கத்தக்கதாக உள்ளது. தென்னாட்டு அரசியல் உரிமைகளும் தலைவர்களின் தகுதிகளும், வடநாட்டுத் தலைவர்களாலும் தாக்கீதுகள் பிறப்பிக்கும் தம்பிரான்களாலும் தட்டிப் பறிக்கப்படுகின்ற தரங்கெட்ட செய்திகளைச் சொல்லிச் சொல்லி சோகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தவர் சஞ்சீவியார். அவர் தற்போது காங்கிரசுக் கட்சியின் சார்பிலே அதிகார பூர்வமாகப் பேசவேண்டிய அவசியம் இருப்பதனாலேதான் உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லித் தன்னை ஒரு உடைந்து போன வெங்கல மணியாக்கிக் கொண்டார்! இவருடைய கீதத்திலே சென்ற ஆண்டில் நல்ல நாதமிருந்தது! இன்றோ அது சோபிதமிழந்து, சுவையிழந்து, ஒலியிழந்து அடங்கிப் போய்விட்டது. நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் வளர்ந்து உருவான சஞ்சீவியார் இதயத்திலே, நச்சுக் கருத்துக்களும் நாசவிதைகளும் பயிராகி விட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கை பகற்கனவென்பதற்கு அவர் சொன்ன காரணங்கள் எதுவேனும் உண்டா என்று அவரது பேச்சினைத் தந்த எல்லா ஏடுகளையும் நுணுக்கத்துடன் தேடிப் பார்த்தாலும் கிடைக்கவில்லை. கூலிக்குக் கொடி தூக்கி வாடகைக்கு வாய் திறக்கும் சில 'வடிகட்டின' வாய் வீரர்களைப்போலவே, புதிய பதவிக்கு உயர்த்தப்பட்ட சஞ்சீவியாரும் புரியாத மொழியிலே தெரியாத காரணத்தைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டு போயிருக்கிறார். வடவர் தம் ஆட்சிப் பீடம், அதற்கு அடித்தளமாக இருக்கும் அரசியல் சட்டம், அந்தச் சட்டத்தின் பிடியிலேயிருக்கும் அதிகாரங்கள், அந்த அதிகாரங்களை அமுலாக்கும் அரசியலார், அவர்களுக்கு அடி பணியும் அமைச்சர்கள், இவர்களின் விழியசைவிற்குத் தங்களின் வழி துறை முறைகளையெல்லாம் விபச்சாரமாக்கித் தரும் மாநில அமைச்சர்கள், இவர்களின் அடிமைப் புத்தியிலே சிக்கித் தவிக்கும் ஒவ்வொரு மாநிலத்தின் மக்கள், இந்த மக்களின் வாழ்வில் இழைந்திருக்கும் இன்னல்கள், என்றும் களையப்பட முடியாதவைகள் ஆகிய எல்லா வகையான சான்றுகளையும் சந்தித்து உணர்ந்த சஞ்சீவியார், தென்னக உரிமையைக் கனவு என்கிறார். திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்க்க வேண்டுமென்பதற்காக எல்லா வகையிலும் எல்லா நிலையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மைகளை உதறித் தள்ளுவது உலுத்தக் குணங்கொண்டோர் செயலாக இருக்கமுடியுமே தவிர. சஞ்சீவியாரின் சபலத்துக்கும் சஞ்சலத்திற்கும் சங்கடத்திற்கும் சான்றாக வரக்கூடாதே! சென்னை அரசினரின் அமைச்சர்கள் சுப்பிரமணியமும் பக்தவத்சலமும் 'இந்தி' கட்டாயமாக்கப்படுவதை எதிர்க்கவில்லை; மைல் கற்களில் எழுதப்படுவதைக் கூடக் கண்டிக்கவில்லை; எழுத அவசியமில்லை என்று மிகத் தாழ்ந்த குரலில் கொஞ்சம் சொரணை பெற்ற தன்மையில் பேசினார்கள். உடனே வடநாட்டில் புயல் எழுந்ததுபோல, அமைச்சர்கள் மீது கண்டனக் கணைகள்! சென்னை சட்ட மன்றத்திலே இன்னுங்கூடச் சற்று உரத்த குரலில் "மத்திய சர்க்காருக்கு இந்தியில் எண்களை எழுத வேண்டாமென்று எழுதிக் கேட்டுள்ளோம்!" என்றும் சொன்னார்கள்! அடுத்த நாள் தில்லியிலேயிருக்கும் மந்திரியாம் பந்துத்துரை அவர்கள், "சென்னை அமைச்சர்களிடமிருந்து எந்த வகையான கடிதமும் எங்களுக்குக் கிடைக்கவில்லை" என்று பாராளுமன்றத்திலே தெரிவித்துவிட்டரர். சென்னைக்கு அமைச்சர் என்றாலும் தில்லிக்கு அடிமை என்பதைத்தானே இந்தச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய இழி நிலைகள் இல்லாமல் தில்லிக்குக் காவடி தூக்கிடும் கேவலப் போக்குகளைக் களைந்தெறியவே திராவிட நாட்டுப் பிரிவினை. இதனையெல்லாம் அறிந்துள்ள சஞ்சீவியார் அவசரச் சிந்து இசைப்பானேன்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை நேரடியாகக் கண்டிக்க வேண்டிய கட்டாயம் காங்கிரசின் தலைவராகிவிட்ட தகுதியினாலே சஞ்சீவியாருக்கு வந்துவிட்டது! தென் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை அவர் பார்த்துச் சுவைக்க வேண்டுமே தவிர, தில்லியின் மூலவர்களுக்கு ஆலத்தி சுற்றிப் பேசவேண்டுமே தவிர "அநீதி!" என்று அலறிவிடக் கூடாது! ஆனால் சஞ்சீவியாரின் சீடர்கள் — கேரளத்திலே இருப்பவர்கள் புதுதில்லிச் சீமான்களைப் பார்த்துச் சீற்றக் குரல் கொடுத்துள்ளனர். கேரளத்துச் சட்ட மன்றத்து எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கொச்சித் துறைமுகத்தை விரிவுபடுத்தவும், கப்பல் கட்டும் தளம் அமைக்கவும் ஒரே குரலில் பேசிக் கடுமையான தீர்மானம் தந்துள்ளனர். சஞ்சீவியார் தாங்கி நிற்கும் கட்சியும் ஆட்சியும் மாட்சிமைமிக்கதென்று சொல்வதற்கும் அதனாலேயே நாட்டுப் பிரிவினை தேவையல்லவென்று தீர்ப்புத் தருவதற்கும் ஏதேனும் சான்றுகள் உண்டா? மராட்டியம் போர்க்கொடி உயர்த்தியது; பிணங்கள் பம்பாய்த் தெருக்களிலே குதிரைக் காலடிகளில் சிக்கிச் சிதைந்து இரத்தமும் மண்ணும் ஒன்றாகக் கலந்தது; நேரு சௌபாதிக் கடற்கரையில் பேசமுடியாமல் திரும்பினார்; மராட்டிய மாவீரன் சிவாசியின் சிலை திறக்கச் சென்றபோது கூட, திரும்பிப் போகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அந்தப் பண்டித நேரு தான்—முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன் என்று குரல் கொடுத்த ஆணவபுரியின் ஆதிக்கத் தலைவர்தான், சென்ற கிழமை இரண்டு புதிய மாநிலங்களைப் பிரித்து, அதில் ஒன்றைத் துவக்கி வைத்து வாழ்த்துக்களை வழங்கியிருக்கிறார்! அன்றைய தில்லி ஆட்சியின் திமிர் இன்று எங்கே போய்விட்டதென்பதை, எதிர்பாராத நேரத்திலே தலைவராகிவிட்ட சஞ்சீவியார் காணட்டும்! தில்லிக்காரர்கள் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு இசைவு தருவது இரண்டாவதாக இருக்கட்டும். ஆனால் இப்போதிருக்கிற இந்த அமைச்சர்களின் எந்த வேண்டுகோளையாவது ஏற்றுக்கொள்கிறார்களா என்பதையாவது ஆந்திரப்பட்டிருக்கும், ஆந்திரத்தின் செல்லப்பிள்ளையெனத்தகும் சஞ்சீவியார், சற்றே எண்ணட்டும்! அங்கே இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்பட்டு ஆட்சியின் உரிமைகள் உவந்தளிக்கப்பட்டு விட்டன! இங்கே சொந்த நாட்டுக்குப் பெயர்பொறித்துத் 'தமிழ்நாடு' வளரவும் மிளிரவும் வகையில்லை! வடநாட்டு ஆட்சிப்பீடம் அதனுடைய அதிகாரப் பிடிப்புகள் இருக்கும்வரை, தென்னகம் தேய்ந்தும் தீய்ந்தும் போகவேண்டியதுதான் என்பதை அனுமந்தையாவிலிருந்து அக்கிரகாரத்து முனிவர் இராசகோபாலர் வரை சொல்லி விட்டார்கள்! இத்தனைக்கும் பிறகு சஞ்சீவியார் "வடநாட்டுத் தென்னாட்டு ஒற்றுமைப் பண்பை"க் காற்றடித்தால் அறுந்து போகும் கதர்நூலினாலே கட்டி இழுத்துக் கொண்டு போகலாம் என நம்புவது கனவுதான்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கையை எதிர்க்கும் பெரிய மனிதர்களின் பட்டியலிலே மாம்பலத்து மாக்கியவல்லியெனத் தகும் இராசகோபாலருக்கும் இடம் உண்டு! இப்போது சஞ்சீவியார் முன்னேற்றக் கழகத்தை 'கொசு' என்று சொன்னதுபோல, ஆச்சாரியார் 'மூட்டைப்பூச்சி' என்று கனைக்கிட்டார்! மரத்துப்போன மந்திரி மாணிக்கவேலர்கூட, சென்னை நகரசபை நிர்வாகத்திலேயிருக்கும் முன்னேற்றக் கழகத்தவர் கொசுக்கடியைப் போக்கவில்லை என்று பேசிவிட்டு. கழகத்தின் அரசியல் கடிக்குப் பயந்துகொண்டு கோட்டைக்குள்ளே போய்ப் பதுங்கிக் கொண்டார்! குறைத்து மதிப்பிடப்பட்டதனாலே கழகத்தின் மாண்பு மறையவில்லை. வடநாடு சென்ற ஆச்சாரியார் வடவர்களின் இந்தி வெறியினாலே கடிக்கப்பட்டார்! சொல்லடிகளைத் தாங்கிக்கொள்ள வேண்டியரானார்! திராவிட இயக்கத்தவர் பல ஆண்டுகளுக்கு முன்னால் "என்றோ ஒரு நாள்" என்று சொல்லியதை, இப்போது அவர் சந்தித்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்புவரை காங்கிரசுக் காரராக இருந்த இராசகோபாலாச்சாரியை, வடவர்கள் ஏற்றுக்கொள்ளவும் மதிக்கவும் தயாராக இல்லை! பாரதமாதா புதல்வர்களிலேயே குல்லூகப்பட்டர் சிறந்த புதல்வர்; காந்தியாரின் புதல்வருக்குக் கன்னிகாதானமளித்துக் கண்ணியம் பெற்றவர். அவரையே அகில இந்திய 'இந்திவாலாக்கள்' பேசவிடாமல் தடுத்துவிட்டனர்; இராசேந்திரர் உள்ளம் புண்பட்டது; பந்த் உள்ளம் பதறினார்;

— 8-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 7-5-'60 ‖ இதழ் 47

சம்பத் பேச்சும் சவக்காட்டார் கூச்சலும்!

கழுதைக்குத் தெரிவதில்லை, கற்பூர மணம்!

மந்திக்குத் தெரிவதில்லை, மலரின் நயம்!

காட்டெருமைக்குத் தெரிவதில்லை, மூலிகைக் கொடியின் வளம்!

வடநாட்டுக்குத் தெரிவதில்லை, கன்னித் தமிழின், களி தெலுங்கின், தீங் கருநாடகத்தின், கவின் மலையாளத்தின் பெருமையும் வீரமும்!

பழித்த நாக்கைக் கிழித்தெறிந்து, பகைத்த முடியைச் சிதைத்தழித்து, வாழ்ந்தது திராவிடரின் வீரம்!

பல்கலையும், பல நூலும், தொல்புகழும், தோலாச் செழுமையும் கொண்ட தீந்தத் திராவிட மொழிக் குடும்பம்!

எள்ளளவும் இதை உணராக் கள்ள மனத்தார், எள்ளி நகையாடியிருக்கின்றனர், திராவிட மறத்தை; இடையிடையே குழப்பம் விளைவித்திருக்கின்றனர், சம்பத் பேச்சில்.

கடந்த திங்களிறுதி நாட்களில் பாராளும் மன்றத்தில் நடந்த செயல்களில் சில பல, நம் உளத்தைத் துளைப்பனவாக, நெஞ்சத்தைக் கொதிக்க வைப்பனவாக நடந்துள்ளன.

வழக்கமாகவே தென்னிந்திய உறுப்பினர்கள் பரிகசிக்கப்பட்டு வருகின்றனர், இத்துணைக்கண்டப் பாராளும் மன்றத்தில். ஒரு முறை, தென்னக உறுப்பினர்கள் அமர்ந்திருக்கும் வரிசையை நோக்கி, ஒரு வட இந்திய உறுப்பினர் குத்திக் காட்டினார்: "அந்தப் பகுதியில் பெயருக்குக்கூடச் சிவப்புத் தோலுடன் ஒருவரும் இல்லையே!"

மற்றோர் அமைச்சர், "தென்னிந்தியர்கள் அறிவு மந்தமாகவே இருக்கிறது அரிசிச் சோறு உண்பதால்!" என்று தன் ஆணவத்தைக் காட்டினார். அவர் மறந்துவிட்டார், நேருவின் மூளையைப் பிரகாசிக்கச் செய்தவர்கள், தென்னிந்தியாவிலிருந்து வந்த வி. டி. கிருட்டிணமாச்சாரியும், டி. டி. கிருட்டிணமாச்சாரியும், சர். ஆர். கே. சண்முகமும், சான்மத்தாயும், இராசகோபாலாச்சாரியாரும் போன்றவர்கள் தாம் என்பதை!

இப்படி கிண்டல் செய்து தென்னவரைக் குத்துவதற்கென்றே, வடக்கத்தியார் இப்போது தில்லி யமைச்சராகவுள்ள தென்னகத்தவரான கே. சி. ரெட்டி அவர்களைக் கிண்டல் செய்திருக்கின்றனர்.

துணைக்கண்டத்தின் எல்லா மொழிகளிலும் பேச எவருக்கும் உரிமையிருக்கிறது. பாராளு மன்றச் சட்டத்தில், முன்னர் வேண்டுமென்றே இந்தியில் பேசிய உறுப்பினர்களின் மண்டையிலடிக்க, தமிழகத்து உறுப்பினர் ஒருவர் தமிழில் பேசி, வடவரை அடக்கியதை அறிவோம். அவரோடு துணிச்சல் உள்ளவர்கள் போய்விட்டனர் என்றெண்ணினர் போலும், வடவர்.

"கே. சி. ரெட்டி அவர்கள் அமைச்சரானாலும் தென்னகத்தவர்தானே! நம் ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டிய அடிமைதானே!" என்றெண்ணினார் போலும், ஒரு வடக்கத்திய உறுப்பினர். அமைச்சர் கே. சி. ரெட்டி அவர்களை நோக்கி ஒரு கேள்வியைத் தொடுத்திருக்கிறார், கடுமையான இந்தியில். அமைச்சர் "எசமான விசுவாச"த்தைக் காட்ட ஓரளவு இந்தியைப் பயின்றவர்கூட. ஆனாலும் அவருக்கு விளங்கவில்லை, கடுமையான இந்தியில் கேட்கப்பட்ட கேள்வியின் பொருள். புரியாத நிலையில் எதையாகிலும் சொல்லி "திருவாளர்-சென்னை" ஆக்கிக்கொள்ள விரும்பவில்லை, திரு. கே. சி. ரெட்டி. எனவே "கேள்வி புரியவில்லை!" என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். உடனே மற்றொரு "வடநாட்டு வெங்காயம்" எழுந்து ஆணவத்தைக் காட்டியிருக்கிறது. "கேள்வி இந்தியில் கேட்கப்பட்டதால்தானே, புரியவில்லை என்று கூறி, பதிலளிக்காமல் விடுத்தீர்கள்?" என்றிருக்கிறது.

"தென்னாட்டு அடிமை ஒருவன் நம் நாட்டு மொழி தெரியவில்லை என்று கூறுகிறான்; அமைச்சர் பதவியில் அமர்த்தி வைத்த நம்மையே பார்த்து ஆணவமாகப் பேசுகிறானே!" என்று குத்திவிடுவது போலில்லையா இப்பேச்சு! எனவே தான் அமைச்சரின் நிலை, பரிதாபத்திற்குள்ளானது.

நிலைமை மீறுவதைக் கண்டார் நம் கழக எம். பி. ஏளனக்கொடி ஏற்றப்பட்டு ஆணவமுரசு தட்டப்படுவதையறிந்தார் தோழர் சம்பத். தட்டிக்கேட்கும் துணிவும் திறனும் இருந்ததால், எழுந்தார்; முழங்கினார்.

"ஒரு கேள்விக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்க அமைச்சருக்கு உரிமை உண்டு. மேலும் அவருக்கு இந்தி தெரியாதென்றால், "தெரியவில்லை!" என்று சொல்வதற்கும் உரிமை உண்டு. அவ்விதமிருக்க அமைச்சரை ஏன் இவ்விதம் வற்புறுத்துகிறீர்களோ தெரியவில்லை?"

இப்படி, தன் கண்டனத்தைத் தெரிவித்தார் சம்பத். அதைக் கண்டு பொறுக்கமுடியவில்லை வடவருக்கு. "அமைச்சரைக் கிண்டல் செய்யப்போனால், அதற்குக் கழகத்தவர் எழுவதா? யார் இவர் கேட்பதற்கு?" என்பது போன்ற ஆணவப்போக்கில் தோழர் சம்பத் முழங்கி முடிக்கும் முன்பே கூச்சல் இடக் கிளம்பியிருக்கின்றனர்; குறுக்கே குறுக்கே ஏதேதோ கத்தியிருக்கின்றனர்.

அவைத்தலைவர் அனந்தசயனம் அவர்கள், வடவர் தன் கேள்வியைச் சரியான முறையில் கேட்கவில்லை என்று வேறு குற்றம் சாட்டும் அளவுக்கு, மதியற்றுப் போன வடவர் கூச்சல் இடுவதேன்? கொதித்து எழுவதேன்? என்றும் தங்கள் ஆதிக்கமே இருக்கவேண்டும் என்ற ஆணவமா?

ஏப்ரல் 25-ல் அமைச்சர் கே. சி. ரெட்டியை அவமதிக்க முனைந்து மூக்கறுபட்டதோடு, வடவரின் கொட்டம் அடங்கவில்லை. மறுமுறையும் வடவர் தவறான பாதையில் சென்றிருக்கின்றனர், ஏப்ரல் 27-ம் நாள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர்முழக்கம், தோழர் சம்பத்தின் வலிய திண்ணிய குரல், ஏப்ரல் 27-ம் நாளிலும் அங்கு ஒலித்ததைக் கண்ட வடக்கத்தியர், கொதித்து எழுந்து கூச்சல் கிளப்பியிருக்கின்றனர்.

உதட்டிலே உறவும் உள்ளத்திலே கள்ளமும் வைத்திருக்கும் கொடியவர்களைவிடக் கேவலமான விலங்குகள், வடவர்கள்! அவர்களின் மூத்த பிறவி பண்டிதநேரு. "இந்தியைப் புகுத்தமாட்டோம்! எப்போது அதைக் கொண்டு வந்தாலும் இந்தி பேசாத மக்களின் ஒப்புதல் பெறாமல்விடமாட்டோம்!" என்று தொண்டை கிழிய ஆயிரம் முறை அலறியிருக்கிறார், அந்தப் பெரிய மனிதர்.

"பார்த்தீரோ, பண்டிதரின் சனநாயக மனப்பான்மையை! கண்டீரோ, அவர் சிறுபான்மை மொழியினரையும் கலந்துகொண்டு செய்வதை!" என எடுத்து முழக்கிய காங்கிரசு ஏடுகள் ஆயிரம்; சொல்லித் தீர்த்த சோற்றுத் தொண்டர்கள் பல்லாயிரம்! ஆனால் அத்தனையும் செல்லரித்த ஏட்டிற்குச் செய்த செப்பரிய ஒப்பனைகளாய்விட்டன! பண்டிதரின் பேச்சுக்கள் அனைத்தும் பகல் வேடக்காரனின் சாகசப் பேச்சுக்களாய்விட்டன. "நெஞ்சம் கொதிக்கும் இந்த அநீதி, சட்டபூர்வமான இந்த மோசடி, ஒருசில நாட்களில் நடக்கவிருக்கின்றது!" என்று அரசியல் சூழல்களை வைத்துக் கணித்திருக்கிறார், கழக உறுப்பினர் சம்பத். எனவேதான் முன்கூட்டியே தன் கண்டனத்தைத் தெரிவிக்கும் முகத்தான் 27-4-60 அன்று பாராளும் மன்றத்தில் தன் குரலை எழுப்பினார்.

" 'இந்தி மொழி பேசாத மக்களின் ஒப்புதல் பெறுவதற்கு முன்பாக, ஆட்சி மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படமாட்டாது' என்று பிரதமர் உறுதிமொழி தந்திருப்பதால், இந்தி மொழி பேசாத மக்களின் ஒப்புதலையோ, கருத்தையோ அறிய ஏதேனும் வழிகள்பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறதா?'

இதுதான் தோழர் சம்பத் விடுத்த வினா!

வினாவுக்குப் பதிலளிக்க வேண்டியவர், குறிப்பிடப்பட்ட பிரதமர். அவர் மன்றத்தில் இல்லாவிடின், அவரது பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சர். ஆனால் இடையில் எழுந்தனர், சில காட்டுமிராண்டிகளின் வழி வந்தோர். மன்றத்தின் நடக்க வேண்டிய முறையறியாத அந்தக் கேவலப் பிறவிகளைத் தாங்கியிருப்பது மன்றத்திற்கே பேரிழுக்கு. மனிதர்கள், மக்களாட்சிப் பண்பின் காவலர்கள் உலவ வேண்டிய இடத்தில், ஏதேதோ உலவுகின்றன!

சம்பத்தின் பேச்சுக்கு அமைச்சர் பதில் சொல்வதற்கு மாறாக, ஏதேதோ எழுந்து, "இல்லை! இல்லை! இல்லவே இல்லை! பிரதமர் அப்படி வாக்குறுதி தரவே இல்லை!" என்று கத்தியிருக்கின்றன. வடவரின் ஆதிக்கக்கோட்டை தகர்கிறது என்றஉடன், அவை அத்தனையும் வெறிகொண்டெழுந்திருக்கின்றன; விலங்கெனத் தம்மை உறுதி செய்திருக்கின்றன.

பதில் சொல்வதற்கென்று அமைச்சரும், அதைச் சொல்வதற்கென்று சில முறைகளும் இருக்கின்றபோது, இந்த வெறியர்கள் ஏன் எழுந்து கூச்சலிட வேண்டும்?

தொடர்ந்து வெளிக் காட்டப்படும் ஆணவ உணர்ச்சி, இப்போதும் காட்டப் பட்டிருக்கிறது என்பதுதானே பொருள்?

ஆவடியில் எழுந்த மொரார்ஜியின் ஆணவம்!

பாட்னாவில்-காசியில் ஆச்சாரியாருக்கு எதிராகக் கிளம்பிய காட்சி!

இப்படித் தொடர்ந்து வந்த ஆணவ வெறிக்கூத்தின் மற்றொரு காட்சி தானே, அமைச்சர் கே. சி. ரெட்டி அவமதிக்கப்பட்டதும், உறுப்பினர் சம்பத் பேசுகையில் கூச்சலிடப்பட்டதும்? இத்தனையையும் எத்தனை நாளைக்குப் பொறுத்துக்கொண்டிருப்பர், தென்னகத்தார்? அங்கங்கே தென்னகத்தில் வெடித்தெழுந்த கணைகள் அவ்வப்போது காங்கிரசின் முகத்தைக் கொத்தியதை நாமறிவோம். இனி, தென்னகத்தின் முழு சக்தியும் ஒன்று திரளப் போகிறது!

அப்போது...

பகைப் புயலே! நீ ஒழிவாய்!
இந்தி வெறியே! நீ சாவாய்!
சவக்காட்டில் விழுந்தழிவாய்!

★

கருநாடகத்தின் வளங்கள்-1

இயற்கை, கருநாடகத்தைப் பொறுத்த வரையில் ஒன்றும் வஞ்சனை செய்துவிடவில்லை. இயற்கை வளமும், கனிச்செல்வங்களும், நீர்ப்பாசன வசதிகளுக்கேற்ற வாய்ப்பும், அபரிமிதமாக மின்சாரம் கொண்டுவர வசதியும் நிறைய இருக்கின்றன. கருநாடகத்தில் என்ன இருந்து என்ன பயன்? எல்லாம் விழலுக்கிறைத்த நீராகவன்றோ ஆகிவிட்டிருக்கின்றன. ''காளி வரம் தர இசைந்தாலும் பூசாரி ஒத்துக்கொள்ள வேண்டுமல்லவா?''என்று சொல்வர் சிலர். அதுபோல் வளம் பல இங்கிருந்தும் வடவரிடம்தானே அந்த வளத்தைப் பயன்படுத்தும் திட்டங்கள் தீட்டும் அதிகாரம் இருக்கிறது.

ஐந்தாண்டு திட்டங்களில் தென்னாட்டை வடநாடு வஞ்சிக்கிறது என்பது ஊரறிந்த, உலகறிந்த உண்மை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டுமில்லை; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டுமில்லை; தீட்டப்பட்டுவரும் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் திராவிடம் எல்லா வகையிலும் வஞ்சிக்கப்பட்டது; வஞ்சிக்கப்படுகிறது; வஞ்சிக்கப்பட இருக்கிறது.

இதை எடுத்து நாம் சொல்லப் போனால் நம்மை 'பிரிவினை புத்தி' யுடையோர், சிறுமையான உள்ளங்கொண்டவர்கள், துவேச மூட்டக் கூடிய பயங்கர வாதிகள் என்று பலப்பல பட்டங்களுடன் அழைத்திடுகின்றனர். எவ்வளவு கீழ்த்தரமாகப் போகமுடியுமோ அவ்வளவு கீழ்த்தரமான முறையில் தாக்கி, தமக்குத் தாமே 'திருப்தி'பட்டுக்கொள்ளக் கூடியவர்களாய் இருக்கின்றனர்.

மை இல்லாமல் பேனா எழுதாது; பேனா இல்லாமல் எழுதவும் முடியாது. ஆனால், மையோடு பேனா இருக்கும்போதும், வேண்டுமென்றே அதைப் புறக்கணித்து எழுதாமல் இருந்தால் என்ன செய்வது? அதுபோல், திராவிடத்தில் வளமில்லை; அதனால்தான் வறுமையை நீக்க,வாட்டத்தைப் போக்க வகையான திட்டங்கள் போட முடியவில்லை எனக் கூறலாம். ஆனால் நம்முடைய திராவிடத்தில் – தென்னகத்தில் – கருநாடகத்தில், தமிழகத்தில், கேரளத்தில், ஆந்திரத்தில் வளமில்லையா? இல்லை என்று எவன் சொல்வான். பூகோளம் அறியாத, நில நூல் பயிலாத, பொது அறிவு இல்லாத ஒருவன் கூடச் சொல்லத் தயங்குவான், திராவிடத்தில் வளமில்லை என்று எவன் சொல்ல முடியும்? எல்லா வளமும் இருக்கின்றன. பின் ஏன் திட்டங்கள் தீட்டப்படுவதில்லை? அணைக்கட்டுகள், மின்சாரத் திட்டங்கள், கனரகத் தொழில்கள், சிறு தொழில்கள், பல்நோக்கு அணைக்கட்டுகள், இன முன்னேற்றத் திட்டங்கள் போன்றவைகள் ஏன் பெருமளவில் தென்னகத்தில் போடுவதில்லை? திராவிடத்தின் ஓர் அங்கமாக விளங்கும் கருநாடகத்தில் இல்லாத வளங்களா, மற்ற வடநாட்டு பகுதிகளில் இருக்கின்றன? இல்லை! இல்லை!

இயற்கை கருநாடகத்தைப் பொறுத்தவரையில் வஞ்சிக்கவே இல்லை, வளத்தை வாரியிறைப்பதில்.

கனரகத் தொழில்கள் நிறுவ, சிறு கைத்தொழில்கள் சிறந்த அளவில் பெருக, அணைக்கட்டுகள் கட்ட, கனிச் சுரங்கங்கள், நீர்வளம் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தொழில்கள் நிறுவ ஏராளமான வசதிகள் இருக்கின்றன.

பருவ எழில் பொங்கி யெழும் நங்கைகள் தங்கள் அழகு அங்கங்களில் அணியும் தங்க நகைகளின் மூலமான பொன், கருநாடகத்தில் கிடைக்கிறது. தங்கத்துக்குப் பெயர்பெற்ற கோலார் தங்க வயல் சுரங்கங்களில் 12.6 இலட்சம் டன் தங்கமுள்ள கட்டிகள் இன்னும் இருக்கின்றன, இருப்பில்! இவற்றை எடுத்துத் திராவிடத்தின் பொருளாதாரத்திற்குப் பயன்படுத்தக் கூடிய காலம் வராமலா போகப் போகிறது!

இரும்புக் கனிகளில் ''எமடைட்'' எனப்படும் வகை பெருமளவில் கருநாடகத்தின் மடியில் புதைத்து கிடக்கிறது. மேலும், 'மேகன டைட்' எனப்படும் இரும்புக் கனி வகையும் கருநாடகத்தில் இருக்கின்றது, தோண்டி யெடுக்கப்படாமல். இவை பெரும்பாலும் மாண்டியா, மைசூர், சிமோகா, பெல்லாரி, ஆசுபெட், சாண்டூர், சிக்முகளூர், சித்ரதுர்கா, குல்டா, ஒன்னேவார், சுபா, டண்டலி, குப்பி, சிக்நாயக்கன் அள்ளி ஆகிய இடங்களில் அபரிதமாகப் புதையுண்டு கிடைக்கின்றது. இவற்றில் கொஞ்சமே பயன்படுத்தப் பட்டு வருகின்றன, பத்ராவதி இரும்பு எஃகு ஆலையினரால்.

மாங்கனீசு கருநாடகத்தின் கனிச் செல்வங்களுள் ஒன்று. பெல்காம், பெல்லாரி, பிசாபூர், சித்ரதுர்கா, தார்வார், கார்வார் சுபா, டண்டலி, சிமோகா ஆகிய பகுதிகளில் புதையுண்டு கிடக்கின்றது.

இந்தியாவில் மொத்தம் 132 இலட்சம் டன் குரோமைட் புதையுண்டு கிடக்கிறது எனலாம். அவற்றில் கருநாடகம் இரண்டாவது இடம் வகிக்கிறது. ஆம், இந்தியாவில் புதையுண்டு கிடக்கும் குரோமைட்டில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு கருநாடகத்தில் உள்ளது. மைசூர், சிக்முகளூர் ஆகிய இடங்களில் குரோமைட் உள்ளது.

'கியானைட்' (Kyanits) எனப்படும் கனிச்செல்வமும் கருநாடகத்தில் இருக்கிறது. கூர்க், சித்ரதுர்கா ஆகிய இடங்களில் இந்தக் கியானைட் கிடைக்கின்றது. ஆனால் பயன்படுத்துவோர்தான் யாருமில்லை.

''சிலிமினைட்'' (Silliminite) எனப்படும் கனிச்செல்வம் எங்கள் கருநாடகத்தில் இருக்கிறது. காமசமுத்ரா, கூர்க், ஓலால்கார ஆகிய இடங்களில் சிலிமினைட் இருக்கின்றது.

''கோரண்டம்'' (Corundum) கருநாடகத்தில் உள்ளது. சிக்முகளூர், மைசூர், பந்தூர், எலினூர், இரேபண்தாதி, கடிகார், கேமிமார், மலேகால், டும்கூர் ஆகிய இடங்களில் இந்தக் கோரண்டம் எனும் கனிப்பொருள் புதையுண்டு கிடக்கிறது

சிக்முகளூர், பெல்காம் ஆகிய இடங்களில் பாக்சைட் இருக்கிறது.

மைக்காவும் மைசூர் மாநிலத்தில் இருக்கிறது. மேலும், பெங்களூரில் கார்னெட், சீனக்களிமண்; பெல்காமில் சீனக்களிமண்; பெல்லாரியில் சோப்புக்கற்கள்; பிசாபூரில் அசுபெசுடாசு; சிக்முகளூரில் அசுபெசுடாசு, கார்னெட், மைகா, சீனக்களிமண்; சித்ரதுர்காவில் அசுபெசுடாசு, பொன் (சீவன அள்ளி, அஜ்ஜாம் பூரில்) ஆகர்சு, பைரட்; தார்வாரில் ஆகர்சு சோப்புக் கற்கள் பொன்; ஆசானில் அசுபெசுடாசு சீனக்களிமண்; கோலாரில் (பொன் தவிர) கார்னெட், களிமண்; மைசூரில் அசுபெசுடாசு, கார்னெட்; வடகென்ராவில் பைரட்சு, அசுபெசுடாசு, சோப்புக்கற்கள், மைகா; தென்கென்ராவில் சீனக்களிமண், மைகா; சிமோகாவில் பொன், சீனக்களிமண், கார்னெட்; டும்கூரில் சோப்புக் கற்கள், ஆகர்சு, சீனக்களிமண் போன்ற இயற்கையளித்த கனிப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன.

இவற்றில் பெருமளவு கனிச்செல்வங்கள் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன.

எத்தனையோ வகைத் தொழிற்சாலைகள்–இரும்பு எஃகுத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, மைக்காத் தொழிற்சாலை போன்று அமைக்கலாம். அமைக்கவில்லையே? இருக்கின்ற ஓர் இரும்பு எஃகுத் தொழிற்சாலையான பத்ராவதி இரும்பு எஃகுத் தொழிற்சாலை, வடநாட்டில் நிர்மாணிக்கப்படும் ரூர்கேலா, துர்காபூர், பிலாய் உருக்குத் தொழிற்சாலைகளின் எதிரில் ஈப்போன்றது தான். பத்ராவதி இரும்பு எஃகுத் தொழிற்சாலையைப் பெரிய அளவில் பெருக்கித் திட்டம் போட மத்திய அரசாங்கம்–வடநாட்டான் கையிலிருப்பதால்–உதவ மறுக்கிறது.

'இல்மெனைட்' எனப்படும் இயற்கைச் செல்வமும் கருநாடகப் பகுதியில் உள்ளது. கருநாடகத்தின் மேற்குக் கரையோரம் நிறைந்த அளவில் இந்த 'இல்மெனைட்' புதையுண்டு கிடக்கிறதாம். இதுவும் 'பாலையில் காய்ந்த நிலா'போல் பயன்படுத்தப்படாமல் கிடக்கிறது.

மேலும் எண்ணெயும் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது, வளம் நிறைந்த கருநாடகத்தில் என்றும் தெரிய வருகிறது.

இத்தனை வளமும் இருந்தென்ன? பயன்படுத்தப்படாமல் அன்றோ கிடக்கின்றன. 'குடு குடு' கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட பேரெழில் கொண்ட பருவப்பூரிப்பு கொஞ்சும் கட்டழகியின் கட்டுக்குலையாத தேகம், செட்டான எழில், பேரழகு எல்லாம் பயன்படுத்தப்படாமல், அனுபவிக்கப்படாமல், வீணாகப் பாழாவதுபோல் கருநாடகத்தின அபரிமிதமான கனிச் செல்வங்கள் பயன்படுத்தப்படாமல் பாழாகிக்கொண்டிருக்கின்றன.

தென்னாட்டின் வளம் இருந்தும் பயனில்லை; பயன்படுத்தப்படவில்லை.

இவை மட்டும் அல்ல இருநாடகத்தின் இயற்கை வளம். இன்னும், நீர்வளம், நிலவளம், காட்டுவளம் போன்றவையும் இருக்கின்றன. அவற்றைப் பின்னர் பார்ப்போம்.

—இரா. மதனகோபால்
பி. காம்., டி. ஐ. பி.

அடுத்த இதழில்

தொடர்கதை யொன்று தொடங்குகிறது!

தங்கம், தங்கநிறம் தான்; அவள் குணமும் பத்தரை மாற்றுத் தங்கம் தான். ஆனால், அழகான பெண் என்பதற்காகவோ, நல்ல குணவதி என்பதற்காகவோ இந்தக்காலத்தில் யாரும் கலியாணம் செய்துகொள்ள முன்வந்து விடுகிறார்களா, என்ன? தங்கம் என்று சொன்னால் போதுமா? பெயர் இருந்தால் போதுமா? கையிலே எவ்வளவு தங்கம் இருக்கிறது என்று தானே எல்லோரும் பார்க்கிறார்கள்.

இந்தத் தங்கம் என்ற குணக்கொடியின் நெஞ்சையுருக்கும் கதைதான்——

கருத்துப் போராட்டங்கள், தத்துவச் சிந்தனைகள் நிறைந்த

மல்லிகைப் பந்தல்

நவரச எழுத்தாளர்

திரு. நாரா. நாச்சியப்பன்

எழுதும் தொடர் கதை.

இது ஒரு சமுதாயச் சித்திரம்!

சௌ என் லாய்-
சிரிக்கும் சீனப் பொம்மை!

இன்றைய அரசியல் அரங்கத்தில் ஆடல்வல்லவர்களாய் இருப்பவர்களுள் ஒருவர், தோழர் சௌ என் லாய். பொதுவுடைமைவர்க்கத்திற்கே சிரிப்பு ஒருபகை என்று கிண்டலாகச் சொல்வதுண்டு. தோழர் மாலட்டோவுக்கு எப்படிச் சிரிப்பதென்பதுகூடத் தெரியாதாம். சிரித்தால் முத்துதிர்ந்துவிடும் என்றில்லை; செயல் கெட்டுவிடுமாம். அதனால் மாலட்டோவின் முகபாவத்தை விதந்தோதுவார்கள்! சிலர் அவருக்குச் சிரிக்கவே தெரியாதோ என்பார்கள்! ஆனால் தோழர் சௌ அவர்கள், சிரிப்புக் கலையின் சிகரத்தில் ஏறியவர். மாலட்டோவ் வாயே திறக்கமாட்டார்; நடைபெறும் செயலைச் செய்யக்கூடாது என்று நினைக்கும்போதுகூட. ஆனால் சிரிக்கத் தெரிந்த தோழர் சௌவோ, வாயைத் திறக்கவும் செய்வார். நெஞ்சில் "இல்லை!" என்ற எண்ணம் இருக்கும்போதும் உதட்டில் "ஆம்!" என்ற சொல்லை விளையாட விடவும் செய்வார். அவர் உதட்டில் "சரி!" என்ற சொல் வந்தால், "முடியாது!" என்ற பொருள் நெஞ்சுக்குள் புதையுண்டு கிடக்கிறது என்றும் சொல்லலாம்.

பழம்பெரும் மண்டாரியக் குடும்பமொன்றில் பிறந்த தோழர் சௌ, சிறுவயதில் நடிப்புத் தொழிலைக் கற்றார். அதிலும் பெண் வேடம் தாங்கித்தான், வெகு பல நாடகங்களில் நடித்தார். அப்போது அவர் கற்றுக்கொண்ட நடிப்புதான் இப்போதும் அவருக்குக் கை கொடுக்கிறது! சப்பானின் வசேடாப் பல்கலைக்கழகத்திலும், சைனாவிலுள்ள நான்கை பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்ற அவர், பின்னர் பிரான்சிலும் படித்தார். அப்போதே அவர், லில்லியிலும் ரைனிலேண்டிலும் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் ஆர்வமிக்க புரட்சிக்காரராக உழைத்தார். பின்னர் சீனப் பொதுவுடைமை இயக்கத்தின் பாரிசுக் கிளையை ஏற்படுத்துவதில் தோழர்கள் சென் யிக்கும் லா லீ சானுக்கும் துணை நின்றார்.

தோழர் சென் யீ நில முதலாளி ஒருவரின் மகன். அவர் இரசாயனப் பிரிவில் உயர் படிப்புக்காக பிரான்சுக்கு வந்திருந்தார். அங்குதான் அவர் தோழர் சௌவைக் கண்டு பழகி, பொதுவுடைமைபற்றிப் பயிலத் தொடங்கினார். அப்படி, பொதுவுடைமை இயக்கத்தில் தன் தொண்டை ஈடுபடுத்திக்கொண்டிருக்கும்போதுதான் அவரும் தோழர் சௌவும் கூடி சீனப்பொதுவுடைமை அணியின் பாரிசு நகரப் பிரிவை அமைத்தனர்.

சௌ, இங்கிலாந்தில் ஓராண்டையும் செர்மானியில் சில காலத்தையும் கழித்தபின், 1924 ல் சைனா திரும்பினார். திரும்பியதும் தன் கட்சியின் குவாங்டங் மாநிலக் கிளைக்குச் செயலாளரானதோடு, சியாங்கேசேக் தலைமை வகித்த வாம்போவா படைக்கல்லூரியில் அரசியல் போதகராகவும் அமர்ந்தார். சௌவுக்கு அப்போது வயது 29 தான். அந்த நேரம் பொதுவுடைமையருக்கும் சியாங்கேசேக் கட்சிக்கும் ஒற்றுமை இருந்தது. அவர்கள் கூட்டணி அமைத்துக்கொண்டனர். அப்போதுதான் சியாங்கேசேக்கின் படைக்கு சாங்காயின் கதவைத் திறந்துவிட்ட புகழ்பெற்ற 1927-ம் ஆண்டையப் பொதுவேலை நிறுத்தத்தையும் எழுச்சியையும் உண்டாக்கித் திறம்பட நடத்தினார், சௌ. அந்நிகழ்ச்சியே அவருக்கு வரலாற்றில் ஒரு தனியிடத்தை உருவாக்கித் தந்ததென்றால், அது தவறில்லை.

சியாங்கேசேக்குக்கும் பொதுவுடைமையருக்கும் இருந்த இந்தக் கூட்டோ, பின் ஒரு திங்களில் முறிந்தது. சாங்காய் வெற்றிக்கு மூலவராயிருந்த சௌவின் உயிர், இப்போது சியாங்கின் கையில் ஊசலாடியது. தோழர் சௌவுக்கு, சியாங் மரண தண்டனை விதித்தார். காவலிலிருந்த சௌ தன்னைக் காத்துவந்த கோமிண்டாங் கட்சி அதிகாரியை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடிவந்துவிட்டார்.

வெளி வந்தவருக்குக் கட்சியில் இருந்த நிலை சிலபல கேள்விகளைத் தந்தது. வெல்லும் பகுதி அறிந்து, அதோடு இவரும் சேர்ந்துகொண்டார். லியூ சோச்சி, லிலிசான் ஆகியோருடன் சேர்ந்த சௌ, திருத்தியமைக்கப்பட்ட கட்சியின் தலைமைக் குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். புதிய தலைமையரால் கொண்டுவரப்பட்ட இடதுசாரித் தீவிரக் கொள்கைகளை, சௌ முழுக்க ஏற்றுக்கொண்டதோடு, அவற்றில் தன் முழு ஈடுபாட்டையும் காட்டத் தொடங்கினார் ஆனால் ஓராண்டிற்குள் தோழர் லிலிசான் கட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்; எனினும் தோழர் சௌ. "பாவ மன்னிப்பு"க் கேட்டுக்கொண்டு கட்சியின் புதிய தலைவர்களிடம் தப்பித்துவிட்டார். புதிய தலைமை பீடத்தை, மாசுகோ சென்றுவந்த வாங் மிங், போ கு, லோ பு முதலிய சீனர்களே பெரும்பாலும் அலங்கரித்தனர். ஆனாலும் அதிலும் ஓர் இடம் தோழர் சௌவுக்குத் தரப்பட்டது.

கட்சியில் ஏற்பட்ட மற்றொரு புயலால் தோழர் மாசேதுங்கும் அவரது அணியினரும் பின் தள்ளப்பட்டனர். கொரில்லாப் படையை நடத்தித் திறமை காட்டிய மாசேதுங் பின்னே தள்ளப்பட்டுவிட்ட அந்நேரத்தில், போ கு கட்சியின் தலைமையில் அமர்ந்தார்; சௌ, படையின் தலைமைக் கண்காணிப்பாளரானார்.

1935 சனவரியில் நிலைமை மாறி, மா சே துங்கின் கை மறுபடியும் ஓங்கியபோது, தோழர் சௌ தனது கருத்துக்களை வழக்கம்போலவே மாற்றிக்கொண்டார்.

அடுத்த ஆண்டில் அவர் மறுமுறை தனது மகுடத்தில் ஒரு ஒளி மணியைப் பதித்துக்கொண்டார். சியாங்கேசேக்கை, அவரது தளபதியான சாங் குசே-லியாங் சிறையில் அடைத்து வைத்துப் புரட்சி செய்தார். அப்போது தோழர் சௌதான் அங்கிருந்த நெருக்கடியைத் தவிர்த்து, தோழர் சியாங்கேசேக்கை மீட்டுவந்தார். அதற்குக் கைமாறாகப் பொதுவுடைமையரும் கோமிண்டாங்குகளும் ஒன்று சேர்ந்து சப்பானியர் படை எடுப்பை எதிர்க்க வேண்டும் என்றார். அதன்படி ஒன்றுபட்டு அவர்கள் அமைத்த அணியில், பிளவுகளும் விரிசல்களும் உண்டாகியபோதெல்லாம் அவற்றை அடக்கிப் பூசி மெழுகிய பெரும்பணி சௌவின் திறனாலேயே நடந்தது. மாசேதுங், சௌ என் லாயை சங்கியாங்கில் தனது நிரந்தரப் பிரதிநிதியாக இருக்கச் செய்தார். அங்குதான் சௌ, நேருவை முதன் முதலாகச் சந்தித்தார். அப்போது சௌ என்லாய் தன் பணிக்கு கோமிண்டாங்-பொதுவுடைமை இணைப்புக்கு, நேருவின் பதவியையும் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. அந்த நாட்களில் சௌ சங்கியாங்கில் நடந்துகொண்ட முறை, பின்னாளில் சீனாவில் பொதுவுடைமை அரசு அமைந்தால், அதில் வெளிநாட்டு அரசியல் வாதிகளோடு தொடர்பு கொள்ளக்கூடிய முதல் தரமான ஆளாக அவரே வரமுடியும் என்ற எண்ணத்தை உருவாக்கியது.

1955-ல் அவர் பாண்டுங் மாநாட்டில் பற்றிய பங்கும், ஆசிய நாடுகளை மயக்கிச் சீனாவின் பால் நல்லெண்ணம் கொள்ளச் செய்தது. சிரிப்பும் அமைதியும் தவழ அவர் ஆசிய அரசியல் வாதிகளிடம் நடித்த நடிப்பு, நேருவின் பெருமையைக் கூட ஓரளவு மங்கச் செய்தது.

சீனப் பொதுவுடைமை அரசு அமைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. பல மாற்றங்களும் நடந்துவிட்டன. வெளிநாட்டு அமைச்சராயிருந்து, இப்போது பிரதமராகவும் ஆகிவிட்ட சௌ, அந்தப் பல மாற்றங்களையும் வென்று தன் பெயரை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறார்.

இற்றைநாள் சீனத்தில், கட்சி வரிசையில் மூன்றாவது மனிதராகவும், ஆட்சி வரிசையில் இரண்டாவது தலைவராகவும் திகழ்கிறார்.

இந்தியாவில் உள்ளதானாலும் சரி; உருசியாவில் உள்ளதானாலும் சரி; எங்கெங்கும் இருக்கின்ற பொதுவுடைமை இயக்கங்கள், அடிக்கடி "பாவ மன்னிப்பு"க் கோரியே வந்திருக்கின்றன. "இது நாள்வரை நாங்கள் தவறான பாதையில் சென்றுவிட்டோம்! இனியும் அப்படிச் செல்லமாட்டோம்!" என்று இந்தியத் துணைக்கண்ட பொதுவுடைமையணி போலவே, பிறநாட்டு அணிகளும் சென்றிருக்கின்றன. ஆனால் அந்த அணிகளுக்குள்ளேயே ஒரு தனிப்பட்ட மனிதர் அடிக்கடி "பாவ மன்னிப்பு"க் கேட்டே வளர்ந்திருக்கிறார் என்றால், அவர் சௌ என் லாயே தான். பணிந்து போவதும், வளைந்து கொடுப்பதும், சிரித்துப் பேசுவதும் ஒரு மனிதனுக்குப் பதவியை நிலைக்க வைத்திருக்கிறது என்ற பேச்சுக்கு, ஒரே எடுத்துக்காட்டு தோழர் சௌவே தான். இப்போதும் தில்லிக்குவந்து சிரித்துக்கொண்டு போயிருக்கிறார். நாடகத் தேர்ச்சியுள்ள அவரது சிரிப்பின் பொருளை, யாரே அறிவார்?

—மதுரையான்.

உள்ளதைச் சொல்லார்!

சௌ என் லாயும் அவரது கூட்டாளிகளும் நிலைமையை முழுக்க ஆராயும் நோக்கத்துடன் வந்து போயிருக்கிறார்கள். ஒரு சாதாரண நட்பு முறைப் பேச்சே சிக்கலைத் தீர்த்துவிடும் என அவர்கள் கற்பனை செய்து கொண்டிருக்க முடியாது. அவர்கள் எந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பது ஒரு சில காலத்திற்குப் பின்னர்தான் தெரிய முடியும். **ஏனெனில், உள்ளத்தில் உள்ளதை அப்படியே சொல்வது சீனர்களின் பழக்கமில்லை.** அவர்கள் ஏதோ குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்திய மக்கள் கட்டாயம் அப்படிப்பட்ட குறிப்பைக் கவனிப்பார்கள், ஆர்வத்தோடு. ஆனால் எந்த விதமான உணர்ச்சியுடனோ, சுய சந்தேகத்துடனோ இல்லை!

—"லிங்க்" 1-5-'60.

அன்று செத்தான் அவன்!
ஆகஸ்டில் வருகிறான் இவன்!

படிக்கும் முன்

டிராட்ஸ்கியை கொலை செய்த ராமேன் மெர்காடெர் (Raman Mercader) மெக்சிகன் நீதிமன்றத்தில் 20 ஆண்டு சிறைத் தண்டனை பெற்று, வருகின்ற ஆகஸ்ட் மாதம் விடுதலையடைகிறான். அவன் டிராட்ஸ்கியைக் கொலை செய்த நிகழ்ச்சிகளைக் கோவையாக்கி இசாக் டான் லெவின் (Issac Don Levine) கட்டுரையொன்று தீட்டினார். அதை 'The man who murdered Trotsky'' என்ற தலைப்பிட்டு Readers Digest அண்மையிலே வெளியிட்டது. அந்தக் கட்டுரையின் கருத்தே இங்கே எழுதப்படுகிறது. கோவையாகச் செல்லும் திடுக்கிடும் நிகழ்ச்சிகளையும், சாகசங்களையும் படிக்கும்போது சிறந்ததொரு கதையைப் படிப்பதாகவே உணரமுடியும். ஆனாலும், கதையல்ல இது! சில நேரங்களிலே நடப்பு நிகழ்ச்சிகள் கற்பனைக் கதைகளையும் மிஞ்சிவிடுகிறதல்லவா? அதுதான் இது! தருபவர் மா. தங்கவேலர்.

லெனின் இறந்த பிறகு...! டிராட்ஸ்கி கொள்கையை ஆதரித்தவர்கள் பலமிழந்தனர். 1917-நவம்பர் போல்சுவிக் புரட்சியிலேருந்தே கருத்து வேறுபாடு கொள்ளத்துவங்கினார் டிராட்ஸ்கி. லெனின் மறைவுக்குப் பிறகு, கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்த டிராட்ஸ்கியின் கருத்து வேறுபாடு, எதிர்ப்பின் உச்ச நிலையைத் தொட்டது. ஆனால், பெருகி வந்த ஆதரவாளர்களோ. அவரே ஆச்சரியப்படும் முறையிலே குறையத் துவங்கினர்.

செல்வாக்கிழந்தார் டிராட்ஸ்கி, உருசியாவிலே! துதி பாடியவர்களே தூக்கியெறிந்தனர்! டிராட்ஸ்கிக்கு உருசியாவிலேயே வாழ இடம் கிடைக்கவில்லை. எங்கு திரும்பினாலும் எதிர்ப்புக்குரல். 1929-ம் ஆண்டு சோவியத் யூனியனை விட்டே டிராட்ஸ்கி தப்பித்துக் கிளம்பினார். டிராட்ஸ்கியின் செயலாளர் ஸ்பெயினிலே சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது குமாரன் பாரிசிலே திடீரென இறந்தான். அந்த மர்மச் சாவுக்குக் காரணம்...அவனுக்கும், டிராட்ஸ்கி எதிர்ப்பாளர்கள் விடமிட்டுக் கொன்றதாக டிராட்ஸ்கிய வாதிகள் நம்பினர். சோவியத்தை விட்டுக் கிளம்பிய டிராட்ஸ்கியோ, சொல்லமுடியாத வேதனைகளைத் தாங்கிக்கொண்டே 1937-ம் ஆண்டு அகதியாக மெக்சிகோ வந்தடைந்தார். டிராட்ஸ்கி எங்கு சென்றாலும், தொடர்ந்து சென்று தொலைத்துவிடத் திட்டம் தீட்டினர், டிராட்ஸ்கிய எதிர்ப்பாளர்கள். 'Nkvd' என்ற பெயராலே இயங்கிய உருசிய இரகசியப் போலீசார், டிராட்ஸ்கிய எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் முறையிலே புயல் வேகத்திலே பணியாற்றத் தொடங்கினர்.

இப்போது டிராட்ஸ்கி உருசியாவுக்கு வெளியேயிருந்ததால், வெளியேயிருக்கும் எதிர்ப்பாளர்களையே தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதிலே உருசிய இரகசியப் போலீசார் தீவிரம் காட்டினர்.

ராமேன் மெர்க்காடெர், பாரிசிலே பத்திரிகைத் தொழிலுக்குப் படித்துக் கொண்டிருந்தான். பழைய போல்சுவிக்குள் சோவியத் யூனியனுக்கு அவனைச் செல்லும்படி தூண்டினர். அப்போது அவனது தந்தை டான் பாப்லோவுக்கும், தாய் காரிதத்துக்கும் கருத்து வேற்றுமை இருந்து வந்தது. ராமேனின் தாய் காரிதத் புரட்சி உள்ளம் பெற்றுப் பொதுவுடமைத் தத்துவத்தில் நம்பிக்கை வைத்தாள். அதன் காரணமாக அவளது கணவனின் இதயக் கருத்தோடு வேறுபட்டாள்.

1925-ல் கணவன் டான் பாப்லோவை விட்டுப் பிரிந்து பிரான்சு வந்தடைந்தாள். பிரெஞ்சுப் பொதுவுடைமைக் கட்சியிலும் பதவி வகிக்கத் துவங்கி, நாளடைவிலே கட்சியின் மேலிடத் தலைவர்களோடு நெருங்கிப் பழகினாள். காரிதத்மீது நம்பிக்கை பலப்பட்டது, கட்சித் தலைவர்களுக்கு. எனவே கட்சியின் தலை மறைவுக் குழுவிலும் தலையாய பதவி வகித்தாள் காரிதத். மகன் ராமேனும், அன்னை வழியையே தொடர்ந்தான்.

காரிதத்தின் அரசியல் வழி, புதிய காதல்பாதைக்கும் அவளை அழைத்துச் செல்லத் தவறவில்லை. உருசிய இரகசிய போலீசில் செனரலாகப் பணியாற்றிய எடிங்கன் (Eitingon) என்பவரைக் காதலித்து, அவரது இதயத்தில் இடம் பெற்றாள் காரிதத். அன்னை காரிதத் செனரல் எடிங்கனைத் தொடர்ந்து உருசியாவுக்குச் சென்றாள். அன்னை வழியையே பின்பற்றும் ராமேனும் அவளையே தொடர்ந்தான். உருசியாவிலே "பயங்கர வித்தை"யைப் பழகினான் ராமேன். கொலையைக் கலையாகப் பழகி முடிந்ததும், ராமேனே, டிராட்ஸ்கியை ஒழித்துக்கட்டத் தகுதியானவனென்று உருசிய வட்டாரம் கருதியது.

சூழ்ச்சித் திட்டம் நடைமுறைக்கு வந்தது!

சில்வியா (Sylvia) என்ற அமெரிக்க அழகுப் பதுமை பொதுப் பணியிலே ஆசை வைத்து, ஆர்வத்தோடு பணியாற்றி வந்தாள். ஐக்கிய அமெரிக்காவிலே இயங்கி வந்த டிராட்ஸ்கியாளர் குழுவிலேயும் முக்கிய அங்கம் வகித்திருந்தாள் சில்வியா. பொது வாழ்வைத் துவங்கியிருந்த அந்தப் பொன்புறு பாரிசுக்கு வந்திருக்கும் செய்தி உருசியாவுக்குப் பறந்தது, ஒற்றர்கள் மூலமாக. உருசிய இரகசியப் போலீசார் ராமேனைப் பிடித்து, பாரிசுக்கு அனுப்பி வைத்தனர். பாரிசை வந்தடைந்த ராமேன், முதன் முதலாக சில்வியாமீது காதல் வலையை வீசிப் பணிய வைத்தான். ராமேனே கட்டழகுப் பெட்டகம். அங்கிருந்து கிளம்பிய காதல் மணம் சில்வியாவை மயங்கிச் சாய வைத்தது.

'நான் பொதுப் பணியாற்றுபவள். இந்தக் கொள்கை பிடிக்கிறதோ என்னவோ உங்களுக்கு!"

"அதே பொதுப் பணியைத்தான் எனது வாழ்வு மூச்சாகக் கொண்டிருப்பவள் நான் இந்த எனது போக்கு உனக்குப் பிடிக்குமா என்று நான் கேட்பதற்கும் முன்னதாகவே, நீ முந்திக்கொண்டாய். நல்லது பெண்ணே! உனது கொள்கை கண்டு மகிழ்ந்தேன். எனது இதயத்தையும் தெரிந்துகொண்டாய்! இன்பம் தானே! இனித்த வாழ்வைத் துவக்குவோம், வா!"

அவளது சந்தேகத்துக்குப் பிறகு ராமேன் அழைத்தான். நிழல்போலத் தொடர்ந்துவிட்டாள். ஆனால், இருட்புத் திரைக்குப் பின்னேயிருந்த அவனது இதயத்தைத்தான் அவளால் தெரிந்துகொள்ளமுடியவில்லை. ராமேனை நம்பிய உருசிய போலீசாருக்கு முதலாவது வெற்றி கிடைத்தது. காதல் கனத்த நெஞ்சோடு, பாரிசிலிருந்து நியூயார்க் புறப்பட்டாள் சில்வியா. ராமேனையும், அவளைத் தொடரும்படி கட்டளையிட்டனர் உருசியப் போலீசார். கள்ளத்தனமாக, பயணச் சீட்டு தயார் செய்து, அதற்காக ஒரு கொலையையும் செய்து, பிராங் சாக்சன் என்ற மாறுபெயரிலே ராமேனை நியூயார்க் அனுப்பி வைத்தனர்.

நியூயார்க்கிலே சில்வியாவும், ராமேனும் ஓட்டலிலே தங்கியிருந்தனர். சில்வியா டிராட்ஸ்கிய வாதியாகயிருந்ததால் யாரும் ராமேனைச் சந்தேகப்படவில்லையென்பதோடு, டிராட்ஸ்கிய வாதிகளிடமும் நெருங்கிப் பழகி, அந்த வட்டாரத்திலிருந்த இரகசியங்களையும் ராமேன் தெரிந்துகொள்ள முடிந்தது.

அப்போது, டிராட்ஸ்கி மெக்சிக்கோ நகரத்தைச் சேர்ந்த கோயோகன் (Coyoacan) என்ற இடத்தில் வசித்துவந்தார்.

சில்வியாவின் மூலமாக, டிராட்ஸ்கியின் மாளிகையினுள்ளே நுழைந்தான் ராமேன். முதன் முதலாக அவன் டிராட்ஸ்கி மாளிகையிலே கால் வைத்ததும்...அப்போது டிராட்ஸ்கி அங்கே இல்லை. அந்த மாளிகையையும் அதன் அமைப்பையும் தான் கொண்டு சென்றிருந்த உருசியக் காமிரா மூலமாகப் படமெடுத்து உருசியாவுக்கு அவசரமாக அனுப்பி வைத்தான். அந்தப் புகைப்படத்தைப் பயன்படுத்திக்கொண்டு, உருசிய இரகசிய போலீசார் 20பேர் கொண்ட ஒரு அணிவகுப்பை பயங்கரக் கருவிகளோடு மெக்சிக்கோ அனுப்பி வைத்தனர்.

1940-ம் ஆண்டு மேமாதம் 24-ந் தேதி அந்த உருசிய ஒற்றர் அணிவகுப்பு அதிகாலையில் டிராட்ஸ்கியின் மாளிகையினுள்ளே நுழைந்து சென்றது. மெக்சிக்கன் போலீசு உடையோடும், இராணுவ உடையோடும் ஆர்ப்பாட்டத்தோடு நுழைந்து சென்று, இயந்திரத் துப்பாக்கியால் முன்வாசலைத் தகர்த்துச் சென்றனர்.

தூங்கிக்கொண்டிருந்த டிராட்ஸ்கியும், அவரது மனைவியும் அவர்களோடிருந்த 11 வயது பேரனும் வேட்டுச்சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்து, நிலைமையைத் தெரிந்து கட்டிலுக்கடியிலே ஒளிந்துகொண்டனர். இதற்குள் மெக்சிக்கன் போலீசுக்குச் செய்தி பறக்கவே, வந்த வேலையை முடித்துக்கொள்ளாமலேயே ஓடித் தப்பினர். செய்தியறிந்த உருசிய வட்டாரம் இனியும், ஒரு அணிவகுப்பையே அனுப்பி டிராட்ஸ்கியை ஒழித்துக்கட்டும் திட்டத்தைக் கைவிட்டது. 'தனி மனிதனின்' சக்தியிலே அந்த வெற்றி கிடைக்குமென அது நம்பிக்கை வைத்தது. எனவே, அவர்களின் சமய சஞ்சீவியாகயிருந்த ராமேனுக்குப் பல புதிய கட்டளைகள் பிறந்தன. அதை எதிர்பார்த்திருந்த ராமேன் பரபரப்போடு செயலாற்றத் துவங்கினான். மகன் செய்திடப்போகும் கொலைக்கு வெற்றி தேடித்தரும் முறையிலே, அன்னை காரிதத், மெக்சிக்கோ வந்தடைந்தாள். செனரல் எடிங்கனும் அவளைத் தொடர்ந்து வந்தார்.

இதற்குள் டிராட்ஸ்கியை நல்ல முறையிலே பழக்கப்படுத்திக்கொண்டான் ராமேன் சூலைத் திங்களில் மட்டும், ஐந்து தடவை டிராட்ஸ்கியை ராமேன் சந்தித்தான். டிராட்ஸ்கி குடும்பத்தினர், அவனை எந்த வகையிலும் சந்தேகிக்கவேயில்லை. இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் டிராட்ஸ்கியின் மாளிகையிலே நடந்த பிறகு, ராமேன் டிராட்ஸ்கியை சந்தித்து வாழ்த்தை தெரிவித்துவிட்டு, திருமதி டிராட்ஸ்கியைப் பாதுகாப்பான வேறு இடத்துக்கு அனுப்பும்படி வேண்டினான். அப்போது டிராட்ஸ்கியின் 'தனிமை தனது தொழிலுக்கு-இல்லை; கலைக்குப் பயன்படுமென நம்பினான். டிராட்ஸ்கி, அந்த வேண்டுகோளைக் காதில் கேட்டதோடு மறந்துவிட்டார்.

ஆகஸ்டு 17-ல் மீண்டும் டிராட்ஸ்கியின் மாளிகைக்குச் சென்றான் ராமேன். தன்னோடு [illegible] கொண்டு

— 9-ம் பக்கம் —

அலைகடல்

"கார்சூழ்ந்த வானத்தில் கருக்கி ருட்டு
கண்ணாடி வைரம்போல் மின்னல் வெட்டு
நீர்மோதும் அலைகளிலே கொந்த ளிப்பு
நிலந்தோயும் காற்றினிலே சலச லப்பு
பாரத்தான் இதையெல்லாம் பார்த்த பின்னும்
பயணத்தைத் தொடங்குகிறாய் அச்ச மின்றி
நீர்சென்ற பின்னர்நான் பெருமூச் சோடு
நெடுவழியை இமைக்காமல் பார்த்தி ருப்பேன்!"

"வருந்தாதே என்வாழ்வின் உயிரே! வாழ்வே!
மனம்நொந்து பயனென்ன? நமது வாழ்க்கை
கருங்கடலில் தோணியிலே மிதக்கும் போது
கலங்கித்தான் பயனேது? கலங்க வேண்டாம்!
பருந்துகளும் நாரைகளும் காலம் பார்த்துப்
பறந்தோடி மீன்கொத்தும் தன்மை போன்றே
நெருங்குகிறோம் தோணியிலே நாமும், இந்த
நேரத்தை நழுவவிடின் வாய்ப்பே இல்லை."

"ஆ சலினால் செல்கின்றேன் விடைகொ டுப்பாய்
அலைகடலில் மீன்பிடித்துத் திரும்பி வந்து
காதலெனும் தோணியிலே உன்னை ஏற்றிக்
கரைகாணா இன்பத்தைக் கொடுக்கின் றேன்நான்
வேதனையால் வேகாதே! விழிகள் சிந்தும்
வெந்நீரைத் துடைத்துக்கொள்; வருகின் றேன்நான்
சீதளமே!" என்றான்பின் சென்றான்; மங்கை
செதுக்காத சிலையாக நின்றி ருந்தாள்.

∴ ∴ ∴

தளிர்மரங்கள் விழக்கண்டாள் தாழைக் காடு
தடம்புரண்டு வேரோடு பெயரக் கண்டாள்
குளிர்சோலைக் கனிக்குலைகள் குலுங்கக் கண்டாள்
குடிசையெலாம் புயற்காற்றில் மிதக்கக் கண்டாள்
கிளிக்கூட்டம் சிறகடித்துப் பறக்கக் கண்டாள்
கீழ்வானில் புழுதிசென்று படியக் கண்டாள்
வெளியெங்கும் புழுக்கள்போல் மக்கள் கூட்டம்
விரைந்தோடி ஒளிகின்ற காட்சி கண்டாள்.

சினம்பொங்கி எழுகின்ற கடலைக் கண்டாள்
சீறிவரும் புயற்காற்றின் வேகம் கண்டாள்
மனம்ஒடுங்கி நின்றபடி பாறை மீது
மாறிமாறி மோதுகிற அலையைக் கண்டாள்!
இனம்தெரியா நடுக்கத்தால் உள்ளம் குன்றி
எண்ணத்தின் சுழற்சியிலே உணர்வி ழந்து
கணவனவன் வருகின்ற வழியைப் பார்த்துக்
கலங்கரையாய் நின்றிருந்தாள் மீனப் பெண்ணாள்.

நாரைகளும் கொக்குகளும் கடலோ ரத்து
நண்டுகளும் பறவைகளும் இங்கு மங்கும்
சாரையாக இரைதேடிப் போகக் கண்டு
தன்னுணர்வு பெற்றவளாய் விழித்துப் பார்த்தாள்
பேரலைகள் பருவமெனும் படியில் நின்ற
பெண்போல அடங்கிப்போய்ப் பணிந்து போகும்
சீர்கண்டாள் மனமகிழ்ந்தாள், தென்னம் பாளை
சீராகப் பிளந்ததுபோல் சிரித்து நின்றாள்.

தோணியொன்று கரைநோக்கி ஆடி யாடி
தொலைவினிலே வரக்கண்டாள், மகிழ்ச்சி கொண்டாள்
பேணிதனை வளர்க்கின்ற கணவன் வந்து
பேசாமல் தேன்முத்தம் தருவான் என்று
நாணிமிக நின்றிருந்தாள், அவளின் எண்ணம்
நாள்கண்ட நிலவாக வெளுத்துப் போச்சு!
தோணியிலே வந்தவரைக் கண்டாள் அந்தோ
தூயவனைத் தன்னாளன் தன்னைக் காணோம்!

"என்னுயிரை என்னாளன் தன்னை நீங்கள்
எங்கேனும் கண்டீரோ சொல்வீர்" என்று
மின்பூத்த ஒல்லிடையாள் இரைந்து கேட்டாள்!
மெதுவாக வந்தவர்கள் புகல லுற்றார்:
"உன்னாளன் தோணியினைக் கண்டோம் பெண்ணே!
உருவத்தைக் காணவில்லை; புயலில் சிக்கி
என்னானா னென்று தெரிய வில்லை"
எனக்கூறி நடந்தார்கள் கலங்கி னாள்பெண்.

"அலைகடலே! என்னுயிரைப் பறித்தா கொண்டாய்?
அடியேன்நான் உனக்கிழைத்தத் தீமை என்ன?
கொலைபுரிந்தா என்னாளன் உடலைக் கொண்டாய்?
கொடுங்கடலே! உனக்கேன் இத்தீய எண்ணம்?
மலைபோல நானிருக்க என்னை விட்டு
மருக்கொழுந்தை- என்வாழ்வை மறைத்தா விட்டாய்?
உலையாகக் கொதிக்கின்ற என்றன் நெஞ்சை
உடைத்திட்டாய் அலைகடலே! உடைத்தே விட்டாய்

"அருள்சுரக்கும் கடலென்றும் கருணை வெள்ளம்
அளிக்கின்ற கடலென்றும் உன்னைக் கூறி
திருப்பதிகம் பாடுகிறார் மக்கள் எல்லாம்!
தீமையைத்தான் புரிகின்றாய் நீயெ னக்கு!
வருகின்றேன் கருங்கடலே என்னை யும்உன்
மடிதனிலே ஏந்திசெல்" என்று கூறி
விரைவாகப் பாய்ந்திட்டாள், அதற்குள் சில்லோர்
வெடுக்கென்று பிடித்தவளைத் தூக்கிச் சென்றார்.

—துறையூர் ந. அலி பி. ஏ.

கல்லூரிக் கவியரங்கம்



இவர் தோழர் போத்தி. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர். கடந்த இதழில் இவர் கவிதை வந்தது.

இவர் தோழர் ப. இராமசாமி, சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர். புனைபெயர் விந்தை வேலன்.

இவர் தோழர் நடராசன். இராயப்பேட்டை புதுக்கல்லூரி மாணவர். ஏற்கனவே தென்றலில் எழுதியுள்ளார்.



தோழர் உத்தமன் இவர் வண்ணாரப்பேட்டை தியாகராய கல்லூரியில் பயில்கிறார்.

கடந்த இதழ் வரை, கல்லூரிக் கவியரங்கில் பங்கு கொண்டோர் அனுப்பி வைத்திருந்த கவிதைகளை வெளியிட்டு வந்தோம். சிலரது படங்கள்தான் நமக்கு கிடைத்தன; பாக்கள் கிடைக்க வில்லை. கிடைத்தவற்றை உங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறோம். அனைவருக்கும் தென்றலின் வாழ்த்துக்கள்! வாழ்க! வாழ்க

இங்கே நடிகனுக்குப் புகழ்; அங்கே தூதருக்குத் துன்பம்!

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

பண்டிதருக்கு உள்ளுக்குள்ளே இன்பமாகக்கூட இருந்திருக்கலாம்! மதுரையிலே வந்துகூட இந்தியிலே பேசுகிற மகானல்லவா அவர்! இந்தி வெறியை எப்போதும் குறைத்துக்கொள்ள விரும்பாத லோகியாகூட இராசகோபாலாச்சாரியார் அவமதிக்கப்பட்டது அடாத செயல் என்கிருர்; தன்னுடைய அனுதாபத்தைக் கூறுகிருர்! ஆனல் அங்கே அடிபடாமல் அனுதாப உரைகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்த ஆச்சாரியார், காசி நகரத்துச் செயல்களை மறந்துவிட முயல்கிருர். அவ்வளவு சுலபத்தில் ஆகிற காரியமா? 'பாகித்தான்' தேவையென்று சொன்னர், இந்துத்தான் இரண்டாகப் பிரியாவிட்டால் மக்களுக்கு நல் வாழ்வில்லை என்று கருதி. திராவிடத்தின் தேவைகளை நினைவு கொண்டபோது 'அதனைக் காப்போம்' என்று எழுதிக் காட்டினர். "தேவையான நேரத்தில் தேவையான காரணங்களைத் தேடித் தருவேன்! திராவிட நாட்டுப் பிரிவினையை அப்போது கவனிப்போம்!" என்று அறிவித்தவரும் அவரே. அவர்தான் இன்று நேரு அரசினரை எதிர்க்கின்ருர் என்ற சாதாரண காரணத்திற்காக அங்கே அவதிக்குள்ளானர்! அகில இந்திய ஒற்றுமையை வேற்றுமை நிறங்காட்டிப் பெரிதுபடுத்துவதாக முன்னேற்றக் கழகத்தவரைக் கண்டிக்கும் காங்கிரசுத் தலைவர்கள், இவைகளைக் கவனத்திலே கொள்வரா?

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கை தேவையல்ல!" என்று கூறும் கூட்டத்தில் குல்லூகப்பட்டரும் இடம் உண்டு. இதனை நம்மிலே எவரும் மறந்துவிடவில்லை! அவருடைய வடநாட்டுப் பயணத்தில் அவர் பெற்றுள்ள புதுப் பாடங்கள், அவரது பழைய பாடங்களை மறந்துவிடச் செய்வனவாகும். ஆச்சாரியார் இந்தியிலே பேச வேண்டுமென்பதுமட்டும் அவர் பேச்சை எதிர்த்தவர்களின் எண்ணமாக இருந்திருக்க முடியாது! இராசகோபாலாச்சாரியைப் போன்ற தென்னுட்டுத் தலைவர் ஒருவர் வடநாட்டிலே நேருவுக்கு எதிராகப் பேசக்கூடிய வாய்ப்பினைப் பெறுவதையே வடவர்கள் விரும்பவில்லை! பெரியார் அவர்களையும் இப்படித்தான் எதிர்த்தார்கள்! பெரியார் நாட்டை விட்டே வெளியேற வேண்டியவர்; வெளியேற்றப்பட வேண்டியவர் என்று, இந்தியாவின் முதல்வர் நேருவே திருச்சியில் வந்து சொன்னர். தண்டிக்காமல் விடுகிறீர்களே என்று நீதிபதிகளுக்கு ஆய்வுரைகளையும் ஆட்சியாளர்களுக்கு ஆணைகளையும் பிறப்பித்துவிட்டுச் சென்ருர். அந்த நேருவைக் 'காலிப்பயல்' என்று பெரியார் பட்டமளித்துப் பெருமைப்படுத்தினர்! அதற்காக வடநாட்டிலே, படித்தும் பகுத்தறிவு பெருதவர்கள் பெரியாரை எதிர்த்தார்கள்! காமராசர்கள், கக்கன்கள் போனல் எதிர்ப்போர் உண்டா? அதைக் காட்டிலும் முக்கியமாக இப்படி இரண்டு உருவங்கள் இருக்கின்றன என்ற கவனிப்பாவது உண்டா? இந்தக் கரிய திருமேனிகள் கிடக்கட்டும். காமராசருடைய 'டேப்ரிக்கார்டுகள்' எனப்படும் பக்தவத்சலமும் சுப்பிரமணியமும் வடநாட்டிலே சென்று பொதுக்கூட்டங்களிலே அகில இந்திய ஒற்றுமையின் சிறப்புகளைப் பற்றி என்றைக்காவது புலம்பியது உண்டா? அங்கே எந்த மண்டலக் காங்கிரசுக் கமிட்டித் தலைவராவது தயாரா இவர்களைப் பேச வைக்க? வடநாட்டு எதிர்ப்புக் கூடாதென்கிருரே வீரத் தலைவர் சஞ்சீவி; அவர் தன்னுடைய அதிகாரத்தின் கீழுள்ள அகில இந்தியக் காங்கிரசின் கிளைகளுக்குத் தென்னுட்டுத் தலைவர்களை அழைத்து, அவர்களது அழகுப் பேச்சுக்களையெல்லாம் கேட்டு மகிழ வேண்டும் என்று ஆணை பிறப்பித்திட, ஆற்றல் உண்டா? அரியலூர் அளகேசன்கள் அங்கே போய்ப் பேசமுடியுமா? இராசபாளையத்தில்மட்டும் வாய் கிழிந்தது ஏன்? முன்னேற்றக் கழகத்தை ஏசிப் பேசுகின்ற எவராக இருந்தாலும் வடவருக்கும் தென்னவருக்கும் இருக்கும் அறுக்கமுடியாத தொடர்புகளை, அன்புப் பிணைப்புகளைச் சொல்லட்டும்; கேட்டுத் தெரிந்துகொள்வோம்! தெரிந்துகொள்வோம் என்று நாம் பேசும்போது - அவர்கள் 'தேர்ந்தெடுத்துக்கொல்வோம்' என்றல்லவா எழுதிக் காட்டுகிருர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையும் மாநிலங்களின் உரிமைத் தேவையும் தெளிவுருத நெஞ்சங்களையெல்லாம் தெளிவுபெற வைத்துள்ளன; கலங்கிய உள்ளங்கள் எல்லாம் கண்ணுடிகளாகிவிட்டன. நாம் அன்று சொன்னேம்; இன்று அவர்களிலே பலர் சொல்கிருர்கள். "ஐந்தாண்டுத் திட்டங்கள் வஞ்சகத்திட்டங்கள்; தென்னகம் அதனுலே வாழப்போவதில்லை!" என்று கழகம் வாதாடிய போதும் கண்டனக் கூட்டங்கள் நடத்தியபோதும், "திட்டங்கள் இங்கிருந்தால் என்ன? அங்கிருந்தால் என்ன? துணைக்கண்டத்தில் எங்கிருந்தால் என்ன? எல்லாம் இந்தியாவில்தானே! இதிலே வடக்குத் தெற்குக் கண்ணேட்டம் கூடாது!" என்று பரந்த கண்ணேட்டத்தில், இருந்ததை மறந்து இல்லாதவைகளைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்த எல்லாக் கட்சியினரும் சொன்னர்கள்! இப்போது, 'திட்ட வேலைகளிலே கோளாறுகள்' என்று தீர்மானம் போட்டுக் காட்டுகிருர்கள்! இப்போதும் கூட வடவர் தம் ஆதிக்க அரணுக்கு வேட்டு வைக்கும் துணிவு அவர்களுக்கு வரவில்லை! காட்டுக்குணம் படைத்தோரும் மாட்டுக்குப் பின்னே ஓட்டுத் தேடுவோரும் ஒதுங்கிப் போய் விட்டாலும், கேடுகெட்ட சர்க்காரின் பிடியிலேயிருந்து நாட்டினை மீட்டிட வேண்டும் என்று பாட்டு மொழியிலே கொட்டுமேளந் தட்டிக் கூட்டத்திலே பேசுகின்ற மற்றவர்கள் பட்டாளம், ஏன் முன்னேற்றக் கழகத்தின் குரல் ஒலியிலே தங்களது இதய ஒலியை இணைப்பதில்லை? இவர்களும் பிரிவினையை எதிர்க்கும் பெரிய மனிதர்களின் பட்டியலிலே இடம் பெற்றுள்ளார்கள்! பெரிய இந்தியா என்றிருப்பதனுலேயே பேதங்கள் நீங்குமென்று நம்புகிருர்கள்! நாடு பெரிதாக இருந்தாலும், நமக்கென ஓர் நல்லாட்சியில்லையெனில் நலமில்லை; நல்வாழ்வில்லை! நல்லறிவுச் சான்ருேர் எவரும் இதனை நம்பியே தீருவர். நாச எண்ணங்கொண்டோர் மட்டுமே நாட்டுப்பிரிவினை என்பது கூட்டுப்பண்ணைக்குள்ளே அடைபட்டுச் சாவது என்பர். உலகத் தலைவர் நேருவின் பெரிய நாடு, ஒரு அமெரிக்க நடிகனைக் கண்டு நடுங்கிவிட்டது! பாரதத்தின் தூதுவரை அமெரிக்காவிலே தங்குவதற்கு இடம் தராமல் அவமானப்படுத்தினர்கள், தில்லி சர்க்காருக்கு அதனைத் தட்டிக் கேட்கும் அருகதையிருக்கவில்லை. ஆனல் பிரட்ரிக்மார்ச் விவகாரத்தில் மத்திய, மாநில சர்க்கார்கள், மந்திரிகள், மந்திரிகளின் பின்னே ஊர் சுற்றும் தந்திரிகள், குடியரசுத்தலைவர் முதலிய அத்தனை பேர்களும் மன்னிப்புக் கேட்டுள்ளனர்! கடமையைச் செய்த காவலர்களுக்குக் கண்டனம்! உலகப் புகழ்பெற்ற தலைவருடைய சர்க்காரின் யோக்யதை இப்படி! இந்தத் தரங்கெட்ட ஆட்சியினைத்தான் நாம் ஏற்க வேண்டுமாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிநாட்டுப் பிரிவினைக் கோரிக்கையினுலே இந்தியா போன்ற பெரிய நாட்டின் பாதுகாப்புக் குலைந்துபோகிறதாம்! நாட்டைப் பாதுகாக்க முடியாதவர்கள், நாட்டின் பொதுநலன்களைக் காத்துக்கொள்ளத் தெரியாதவர்கள் செய்துவிடும் மிகப் பெரிய தவறுகளுக்குத் தாயகத்தின் விடுதலை வேண்டி நிற்கும் இயக்கத்தவர் எப்படிக் காரணமாக முடியும்? பேசிய தலைவர் சஞ்சீவியாராக இருந்தாலும் அல்லது அவருக்குக் கிடைத்துள்ள சமயசஞ்சீவி நண்பர்களானுலும், இந்திய சீன எல்லைப் பிரச்னையைக் காட்டி "நாட்டுக்குள்ள ஆபத்தான நிலையைப் பாருங்கள்!" என்று கேட்டு "நாட்டுப் பிரிவினையை மறந்துவிடுங்கள்!" என்கிருர்கள்! வடவெல்லைத் தகராறு இந்திய சர்க்காரின் ஏமாளித்தன்மையின் உருவம். இதற்கு முன்னேற்றக் கழகத்தவர் பொறுப்பேற்கக் காரணமில்லை! ஆனல் அதே நேரத்தில் இந்தத் துணைக்கண்டத்தைச் சீனருக்கு அடிமைப்படுத்தவும் நினைக்கவில்லை. சஞ்சீவியாரின் நினைவுக்கு சம்பத்தின் பேச்சு வரட்டும். ஐசனேவர் வந்தார்; குருசேவ் வந்தார்; வராசிலோவ் வந்தார்; யூனு வந்தார்; நாசர் வந்தார்! இவர்கள் அத்தனை பேர்களிடமும் இந்திய-சீன நட்புக்கு இரகசிய ஆலோசனைகள் நடந்தன. உலகத்து இருள் நீக்கும் அலகாபாத் சோதியான நேருவுக்கு ஒளிகாட்ட எத்தனையோ இரவல் விளக்குகள் தேவைப்பட்டன? நாட்டைப் பாதுகாக்க முடியாமல், நாட்டுமக்களின் நம்பிக்கைக்கு உரிமையற்றவர்களின் கைகளிலே நாடு சிக்கிவிட்டதென்று கிருபளானி சொன்னபோது நெஞ்சம் துடித்தது நேருவுக்கு. பல்லைக்கடித்துக்கொண்டு, பாய்ந்து தாக்கிப் பேசினர் நேரு. அவரது படைவீரர்களோ தங்களது தொடை நடுங்கும் வேகத்தில் வார்த்தைகளைக் கிருபளானிமீது வீசினர்கள். 'பேச்சு வார்த்தையில் கூடிப் பேசினுல்' எல்லாம் தீர்ந்துவிடும் என்று காங்கிரசுக்காரர்களும் கம்யூனிஸ்ட்களும் மாறி மாறிச் சொன்னர்கள்! கடிதங்களைப் பரிமாறிக்கொண்டார்கள். சீனர்கள் சுட்டுக்கொன்ற பிணங்களைக் கூடப் புதைக்க மறந்துவிட்டுச் செய்திகளைத் தேடிப் பெற்றுக்கொண்டார்கள்! நேருவை இரங்கூனுக்கு அழைத்தார் சௌ என் லாய்! அங்கே போவது பலக்குறைவு என்று கருதி சௌ என் லாயைப் புதுதில்லிக்கு அழைத்தார்கள்! அந்தக் கொரில்லாப் போர்வீரரும் தயங்காது தக்க பாதுகாப்புகளுடன் வந்து புதுதில்லியில் ஆறு நாட்கள் தனது பழைய பாடங்களையே படித்துக் காட்டினர்! "நேருவே உமக்கு நேரமிருந்தால் என்னைப் பீகிங்கில் வந்து சந்தியும்" என்ற முறையில் சொல்லிவிட்டுப் போய்விட்டார்! சாகடிக்கப்பட்டவர்களைப் பற்றி கைப்பற்றிக் கொள்ளப்பட்டுள்ள பகுதிகளைப் பற்றி, அமைக்கப்பட்டுள்ள பாதைகளைப் பற்றி, எந்தக் கேள்வியும் கேட்க முடியவில்லை பண்டிதமணியால்! அவருக்குப் பராக்குக் கூறும் சஞ்சீவியார் நமது பிரிவினையை எதிர்க்கிருர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை, அகில இந்தியாவின் எந்த வகையான திறமையும் தேவையற்றதெனச் சொல்வதற்குத் துணையாக அமையவில்லை. எல்லையை யிழந்துவிட்டதுகூடக் கடுமையான காரியம்தான். "சீனத்தூதுவர்களும்" "அமெரிக்கத் தூதுவர்களும்" தெருச் சண்டையிட்டு அடித்துக் கொள்கிருர்கள். அதிலே தவறு செய்தது யார் என்று கண்டுபிடித்துத் தண்டிக்கும் தகுதிகூட நேருவின் சர்க்காருக்கு இல்லையென்ருல், பாதுகாப்புக்கு உறுதியில்லாத இந்தியாவை விட்டுப் பிரிவதிலே தவறெதுவும் இல்லையே! தென்னகத்து மாநிலங்கள் கூட்டாக இணைய வேண்டும் என்பது கழகத்தின் இதய வேட்கை! இது நிறைவேறமுடியாதென்று கூறுபவர்கள், கிடைத்த எவரெஸ்ட் சிகரத்தைக் கூட இன்று தங்களுடையதென்று சொல்லிக்கொள்ளும் துணிவு அற்றவர்கள்! இவர்களிடத்திலே அதிகார போதை இருக்குமளவு அரசியல் தெளிவு எப்போதும் இருந்ததில்லை! இன்னும் சிலருக்குப் போதை தெளியும் போது மமதை வருகிறது. "சீக்கியத்தான்" பிரிவினையை ஆதரிப்பதும் 'திராவிடத்தான்" பிரிவினையை எதிர்ப்பதும்-இதற்குத்தக்க சான்றுகளாகும்! 'திராவிட நாடு பிரிந்தால் எதிரிகளின் படையெடுப்பைச் சமாளிக்க முடியாது; சரணடைய வேண்டும்'-இது சவஞானம் கட்சியின் நீண்ட நாள் புலம்பல்! மூன்று பக்கம் கடல் இருக்கும்போது தக்க பாதுகாப்புகளுடன் திராவிடத் தனியரசு இயங்கமுடியும்' என்பது முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளுக்கு முன்னுலேயே சொன்ன பழைய விளக்கம்-புதிய பாடம்! 'தென்றல்' ஆசிரியர் அவர்கள் மதுரையிலே சொன்னதுபோல, முக்கடல் இருந்தும் பாதுகாப்பில்லை என்று புலம்புபவர்கள்- சிவஞானக் கிராமணியாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும், இந்த மூன்று கடல்களிலே ஏதாவது ஒரு கடலிலே விழுந்து சாக வேண்டியதுதான்! வேலையில்லை! குறைகளின் நிறை களஞ்சியமாக இருக்கும் நேரு சர்க்கார், தன்னையும் காப்பாற்றிக் கொள்ளவில்லை. தன்னை நம்பியிருப்பவர்களையும் காப்பாற்றித் தரவில்லை! காங்கிரசுக்காரர்களோ தங்களின் சர்க்காரைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தங்களின் மீதுயர்ந்துவிட்ட பழிகளையும் இழிவுகளையும் துடைப்பதற்குப் பதிலாகக் கழி சுழற்றப் பழகிக்கொண்டு, கழகக் கூட்டம் கலைப்பதற்கு ஓடி வருகிருர்கள்! கலைந்த கனவுகளின் காட்சிப் பொருட்களாக இருக்கும் காங்கிரசைக் காப்பாற்றுவதற்காக காங்கிரசுத் தலைவர்களும் அமைச்சர்களும் மிகவும் வேகமாக பயணம் துவங்குவதை வரவேற்கிருேம்! வாழ்த்துக் கூறுகிருேம்!!

—6-ம் பக்கத் தொடர்ச்சி—

சென்றிருந்த கட்டுரைக் குறிப்பை டிராட்ஸ்கியிடம் நீட்டினுன். குறித்திருந்த குறிப்புகளை மட்டும் பார்த்துத் தெரிந்து பாராட்டினுர் டிராட்ஸ்கி. முடிந்தால், நாளையோ மறுதினமோ அந்தக் கட்டுரையின் முழுவடிவையும் தீட்டி வந்து காட்டுவதாகக் கூறி விடைபெற்றுச் சென்ருன் ராமேன்.

1940 ஆகஸ்டு 20-ந் தேதி மாலை 5-20-க்கு டிராட்ஸ்கியின் மாளிகையினுள்ளே நுழைந்தான் ராமேன். கையிலே தான் கொண்டுவந்திருந்த முழுவடிவக் கட்டுரையோடு நடந்து சென்ருன். இன்னெரு கையிலே காக்கி மழைக்கோட்டையும் அதனுள்ளே...ஒரு பக்கம் கூர்மையாகவும், மறுபக்கம் தட்டையாகவுமுள்ள சுத்தியையும் மறைத்து எடுத்துச் சொன்ருன்.

அந்த கோலத்தோடு ராமேனைப் பார்த்ததும் முதலிலே சிரித்தார் டிராட்ஸ்கி. வணங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தான் ராமேன். ‘என்ன ராமேன், மழைக்கோட்டை இப்போது தூக்கி வந்திருக்கிருயே ?’ என்று கேட்டு வழக்கம்போல சிரித்தார்.

‘இப்போது இப்படியிருந்தாலும், இன்னும் கொஞ்ச நேரத்தில் பயங்கரமான மழை வருமென்று நினைக்கிறேன். அதை உத்தேசித்தே இதையும் கையோடு கொண்டு வந்திருக்கிறேன்’ என்ருன் ராமேன், கோட்டுக்குள்ளே சுத்தியை மேலும் மறைத்துக்கொண்டே.

அவன் கொண்டு வந்திருந்த கட்டுரையை வாங்கிப் படிக்க சன்னலருகே இருந்த மேசைக்குச் சென்ருர். அவர் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னே நின்றுகொண்டிருந்தான் ராமேன். டிராட்ஸ்கியின் சிந்தனையிலே ராமேனின் கட்டுரை மட்டுமே இடம் பெற்றிருந்தது. ராமேனின் சிந்தையிலோ ஆயிரம் எண்ணங்கள்! உருசிய இரகசியப் போலீசாரின் அற்புதத் திட்டம் அவன் கண் முன்னே தோன்றி மறைந்தது! அன்னை காரிதத் நினைவிலே வந்து போனுள்! செனரல் வந்தார்; போனுர்! அவனையுமறியாமலே கைகள் மழைக் கோட்டுக்குள்ளேயிருந்த சுத்தியை மெதுவாக வெளியே எடுத்தன. சுத்தி வெளியே தெரிந்த பிறகு, ஆவேசத்தோடு ஓங்கி மேல்மண்டைக்குக் குறி வைத்துத் தாக்கினுன். ஓங்காரக் கூச்சலோடு டிராட்ஸ்கி சாய்வுப் பலகையைவிட்டுத் திடுமென எழுந்து ராமேனின் கையைப் பலங்கொண்ட மட்டும் கடித்தார். டிராட்ஸ்கியின் ஓலத்தைக் கேட்டு அவரசு மனைவி ஓடிவந்தாள். மண்டையிலடிபட்டு இரத்த வெள்ளத்தில் சாய்ந்துகிடந்த கணவனைக் கண்டு திகிலடைந்து அவரருகே தாவிச் சென்ருள். தப்பிக்கமுடியாத ராமேன், டிராட்ஸ்கியின் மாளிகைப் பாதுகாப்பாளர்களிடம் சிக்கிக் கொண்டான். ஆனுலும், வேதனைப்படவில்லை! தன் காரியம் எந்த வகையிலோ வெற்றி பெற்றுவிட்டதை நினைத்து நினைத்து மகிழ்ந்தான்.

மாளிகைக்கு வெளியே திட்டப்படி அன்னை காரிதத், மகனுக்காகக் காத்திருந்தாள் காரோடு. பாதையின் மற்றொரு மூலையிலே எடிங்கன் காத்திருந்தார். குறித்தநேரம் தவறிப் போகவே, ராமேன் மாளிகைக்குள்ளேயே மாட்டிக்கொண்டதாக எண்ணத் துவங்கினர். அதை உண்மையாக்குவதுபோல மெக்சிக்கன் போலீசார் கார்களிலே பறந்து வந்துகொண்டிருந்தனர். காரிதத் காரைக் கிளப்பினுள் வேகமாக வேதனை கப்பிய நெஞ்சோடு. செனரல் எடிங்கன் வேறு பக்கமாக ஓடித் தப்பினுர். மெக்சிக்கன் ஆம்புலன்சு, டிராட்ஸ்கியை சர்க்கார் மருத்துவமனைக்கு எடுத்துக் கொண்டு விரைந்தது

மருத்துவமனையிலே சிறிது நேரச் சிகிச்சைக்குப் பிறகு, மூளைக்குள்ளே சுத்தி நன்ருகப் பதிந்துவிட்டதால், உயிர் பிரிய நேர்ந்தது டிராட்ஸ்கிக்கு. டிராட்ஸ்கி கண்களை மூடினுர். திருமதி டிராட்ஸ்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டிருந்தாள். மெக்சிக்கன் போலீசு கண்களைத் திறந்துகொண்டது. கொலைகாரன் ராமேனை இழுத்துச் சென்று நீதிமன்றத்திலே நிறுத்தியது. ராமேன், கொலைக்குற்றத்துக்காக 20 ஆண்டுத் தண்டனைபெற்று சிறைக்கோட்டம் சென்ருன். தண்டனையை முடித்துக்கொண்டு அடுத்த ஆகஸ்டிலே வெளிவரவிருக்கும் மகனை வரவேற்க, இப்போது 67-வது வயதைத் தொட்டுக்கொண்டிருக்கும் காரிதத், பாரிசிலே காத்துக்கொண்டிருக்கிருள்! ராமேனைக் காதலித்து ஏமாற்றமடைந்த சில்வியா, வெகுநாள்வரை மூளைக் குழப்பத்தால் தவித்து, முடிவிலே ஓர் அமெரிக்க அழகனை மணந்து, இப்போது. நியூயார்க்கிலே வாழ்கிருள். தேழியா டிராட்ஸ்கி அதே கோயோகன் மாளிகையிலேயே இன்றும் கண்ணீருக்கிடையே வாழ்க்கையை நகர்த்தி வருகிருள். சூழ்ச்சித் திட்டத்தின் ஆணிவேர் என்று கருதிய செனரல் எடிங்கன் மட்டும் போய்விட்டார், இறப்புலகத்துக்கு! ★

சென்னையில்-ஸ்ரீ கிருஷ்ணு, பாரகன், உமாவில்...

ELEGANT

குறள்நெறி மன்றம் திருமுக்கூடல்.

அன்புடையீர்,

எம் மன்றத்தின் சார்பில் 8-5-50 அன்று மாலை 4 மணிக்கு திருவள்ளுவர் திருநாளும் திருக்குறள் வகுப்புத் தொடக்க விழாவும் நடைபெறும். திரு. **மயிலை சீனி வேங்கடசாமி** தலைமையில் திரு. நாரண துரைக்கண்ணன், புலவர் திரு. கா. சி. தனக்கோடி ஆகியோர் பங்கு கொள்வர்.

அனைவரும் வருக!

அன்புள்ள
குறள்நெறி மன்றத்தார்.

—11-ம் பக்கத் தொடர்ச்சி—

உலக ஆரிய மொழிக் குழுவை உலக அறிஞர் இந்து ஐரோப்பிய இனக்குழு என்று அழைப்பர். அதில் வழக்கிறந்த மொழிகள், வழங்கும் மொழிகள் உட்பட நூற்றுக்கணக்கான மொழிகள் உலகில் உண்டு. இத்தனைக்கும் மூலமான முதல் தாய் இனமொழி வடமா கடற்கரையிலோ, தெற்கு ரஷியாவிலோ, வால்கா யூரல் ஆற்றங்கரைகளில் உருவாயிருந்தது. நாடோடிகளாக வாழ்ந்த இம்மரபினர் தாயகமான வடதிசையில் கி. மு. 2000-லிருந்து எக்காரணத்தாலோ திடுமென இனத்தொகை பெருகி மூலத் தாயகத்திலிருந்து மேற்காகப் பால்டிக் பகுதிக்கும்; தெற்காகத் தென் ஐரோப்பா, மேலை ஆசியா மீதும்; கிழக்கு, தென் கிழக்காக நடு ஆசியா, பாரசீகம், இந்தியா மீதும் வெள்ள அலைகளாகப் பாய்ந்தனர்.

மூல ஆரியர் எழுச்சிக் காலமான கி. மு. 2000-க்குமுன் நடு ஆசியா மேலை ஆசியா எங்கும் உயர் நாகரிகம் எய்தியிருந்தது. அதன் வழியாக, எகிப்துக்கும் சீனத்துக்கும் இடையே நில வழி உலகப் பெரும் பாதை ஒன்றும், அராபியா, தமிழகம், மலாயா கடந்த கடல்-வழி உலகப் பெரும்பாதை ஒன்றும் தழைத்திருந்தது. கி. மு. 1500-ல் ஆரியர் எழுச்சி நிலப் பாதையிலுள்ள வளமான நாகரிக நாடுகளனைத்தையும் பாழடித்தது. ஆயினும் மேற்கே ரோமிலும் கிரீசிலும், கிழக்கே பாரசீகத்திலும் இந்தியாவிலும் அழித்த பழய நாகரிகங்களின் அழிபாட்டின் மீது அபுப்திய நாகரிகம் அமைந்தது. ஆரிய இனத்தின் பண்டைப் புகழ் நாகரிகங்கள் இவையே.

ஆரியருக்கு 'ஆரியர்' என்ற பெயர் நடு ஆசியா வந்த பின்னே ஏற்பட்டது. ஏனெனில் நடு ஆசியாவில் ஆரிய நாடு என்ற ஒரு நாகரிக மக்கள் வாழும் நாடு இருந்தது. அந்நாட்டில் வந்து அம்மக்களைப் பாதி கழித்துப் பாதியை அடிமைப் படுத்திய பின்னரே, அவர்கள் அந்நாகரிகத்தைத் தமதாக்கி அதனுடன் கலந்து, அவர்கள் பெயரையும் தாமே சூட்டிக்கொண்டனர். மேலை ஆரியர் தம்மை இன்று வரை ஆரியர் என்று கூறிக்கொள்ளாததன் காரணம் இதுவே.

'ஆரியர்' என்ற சொல் ஏர்-கலப்பை, அழகு; ஆர்-நிறைவு, வளம் என்ற தமிழின் வேர்ச் சொற்களடியாகப் பிறந்தது. உழவும் நாகரிகமும் மேற்கொண்ட நாகரிக உலகின் எல்லையில் இருந்ததமிழினத்தவராகிய ஆரிய நாட்டார் தம்மைப் பெருமையுடன் ஆரிய நாட்டவர் என்று குறித்திருந்தனர். அப்பெயரையே, அவர்கள் நாகரிகத்தை அழித்துத் தமதாக்கி முன்னேறிய புதிய ஆரிய இனம் மேற்கொண்டது.

• நாகரிகமடைந்த தமிழினப் பகுதியினரான நடு ஆசியப் பழய ஆரியர் புதிய ஆரியருக்கு நெடு நாள் கீழடங்கவில்லை. பழய ஆரியர் தலைவரான ஜரதுஷ்டிரர் புதிய ஆரியரின் போலி நாகரிகத்தை எதிர்த்து, தம் பழய நெறியின் புது மலர்ச்சிக் கொடி தூக்கினர். பழய ஆரியரின் பாடற் செல்வத்தைத் தொகுத்துக் 'காதை'கள் அடங்கிய 'ஜெந்த வெஸ்தா' ஆக்கினன். புதிய ஆரியர் இவ்வெழுச்சி முன் தோல்வியுற்றனர். சிலர் பணிந்து பழய ஆரியரின் புது மலர்ச்சி ஏற்றனர். ஏற்காதவர்கள் சிந்து வெளிக்குள் ஓடி வந்து அங்குள்ள தமிழினத்தவர் மீது பழி வாங்கலாயினர்.

மூல ஆரிய நாட்டிலேயே புதிய ஆரியர் பழய ஆரியரிடமிருந்து பல தமிழினச் சொற்கள், இலக்கியப் பண்பாடுகள், வாழ்க்கை முறைகள், வழிபாட்டு முறைகளைக் கற்றிருந்தனர். ஆரிய நாட்டுத் தமிழினத்தவரின் ஜெந்தவெஸ்தாவினை அடிப்படையாகக் கொண்டுதிரித்துப்பாஞ்சாலத்தில் அவர்கள் உருவாக்கிய இருக்கு வேதம் இன்னும் மிகுதியாகத் தமிழின மொழிச் சொற்கள், பண்புகள், நாகரிகக் கூறுகளை மேற்கொண்டது. இக்காலப் புதிய ஆரியர் மொழி வேத மொழி அல்லது கீர்வாணம் என்பது.

சிந்து கங்கை இடைவெளியில் வந்தபோது திராவிடர்கள் பழம் பெரும் கதையிலக்கியத்தைத் தமதாக்கி அவர்கள் புதிதாகத் தம் பாரதமாக்கினர். தமிழர் அறிவைப் பயன்படுத்தி ஒன்ருயிருந்த வேதத்தை மூன்று ஆகவும் அதற்கு உரை விளக்கங்களாக ஆறு வேதங்கள், ஆரணியசங்கள் ஆகியவற்றையும் படைத்துக்கொண்டனர்.

கங்கை வெளியில் அவர்கள் தமிழின மன்னராகிய சனகர் முதலியவர் உதவியால் உபநிடதங்களை ஆக்கி, அம்மரபினரிடையே வழங்கிய பழய காப்பியக் கதையான இராமாயணத்தையும் தமதாக்கினர். புத்த சமண சமயங்கள் நலியத் தொடங்கிய நாட்களில் புத்தரின் சமயமொழியாகிய பாளியை எதிர்த்து அவர்கள் புதிய சமஸ்கிருத மொழி ஆக்கினர்.

சிந்துகங்கை நாட்டிலிருந்து, தமிழினத்தின் வளமான இலக்கியத்தை ஒருபுறம் ஒழித்தும், அதனைப் புதிய சமஸ்கிருத மொழியில் பெயர்த்தும் புதிய ஆரியர் கலை நாகரிகம் பரவிற்று. தமிழகத்தில் தமிழரசர் ஆதரவில் பாலாற்றங்கரையிலும், வடதிசையில் குப்த அரசர் ஆதரவில் உச்சையினியிலும் காசியிலும், காசுமிர அரசர் ஆதரவில் காசுமீரத்திலுமாகச் சமஸ்கிருதம் மாநிலத்தின் மூன்று தளங்கள் பெற்று அனைத்திந்திய மொழியானது கி பி. 5-ம் நூற்ருண்டில்தான். தமிழினச் சொற்களையே இதுவரை பெரிதும் ஏற்றிருந்த சமஸ்கிருதம் இப்போது பாலாற்றுக் காஞ்சிப் பண்ணைமூலம் தமிழ்ச்சொற்களை ஆயிரப் பதினுயிரக் கணக்கில் மேற்கொண்டு தனதாக்கி, தமிழிலக்கியங்களைத் தழுவிப் பின்பற்றி, அந்நாளைய உலக ஆதிக்க மொழியான தமிழின் உலக மேலாட்சியில் பங்குகொள்ளவும், தமிழுடன் போட்டியிட்டுப் பிறஉலக மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்தவும் தலைப்பட்டது. இரு மொழிகளும் சேர்ந்து ஆதிக்கம் செலுத்திய காலம் கி. பி. 5 முதல் 9-ம் நூற்ருண்டுகள் வரை ஆகும்.

கி. பி. 9-ம் நூற்ருண்டில் தமிழ் தென்மொழி என்றும் சமஸ்கிருதம் வடமொழி என்றும் முதன் முறையாகச் சரிசம நிலையில் குறிப்பிடப்பட்டன. அடுத்த மூன்று நூற்ருண்டுகளிலும் தமிழ் தவிர மற்றத் தமிழினத் தாய்மொழிகள்மீதும் பிற தாய்மொழிகள்மீதும் சமஸ்கிருதம் தனி ஆதிக்கம் தொடங்கிற்று. இதற்கு உதவியாகவே தமிழிலிருந்து சமஸ்கிருதம் கடன் பெற்ற சொற்கள், கருத்துக்கள், இலக்கியங்கள், இலக்கணங்கள், கலை இயல் ஏடுகள் யாவற்றையும் அது இப்போது தனதென்று பேசத் தொடங்கிற்று. 12-13-ம் நூற்ருண்டில் தமிழ் தென்மொழி, சமஸ்கிருதம் வடமொழி என்ற நிலை போய், சமஸ்கிருதம் ஒரு ஆதிக்க மொழியாகவும், தமிழும் பிறமொழிகளும் அதற்குப் படிப்படியாக அடிமைப்பட வேண்டும் ஏலாமொழிகளாகவும் கருதப்படத் தொடங்கின. கிட்டத்தட்ட எல்லா இந்திய மொழிகளிலும் திட்டமிட்டு மணிப்பிரவாளம் என்றகலப்பு நடை இயக்கம் உருவான காலம் இதுவே.

மணிப்பிரவாள நடை வடதிசையில் முழு வெற்றி பெற்றது. தாய்மொழிகள் இலக்கியத்தடமற்று, வெறும் பேச்சு மொழிகளாய் அணிமைவரை நிலவிவிட்டன. தெற்கிலும் தமிழகத்துக்கு வெளியே அது தாய்மொழிகளை உருத்திரித்து அவற்றைத் தனித்தியங்க முடியா நிலைக்கும் தமக்கென மூல இலக்கியமில்லா நிலைக்கும் தள்ளின. தமிழ் ஒன்று மட்டுமே தலை நிமிர்ந்து நின்றத்தாயினும், இந்தியாவெங்கும் பரவி ஆட்சி பெற்ற நிறை அடிமைப்பண்பு அதைப் பாதிக்காமலில்லை. ஏனெனில் வடதிசைத் தமிழின மொழிகள் இன்று இந்து-ஆரிய மொழிகளாகவே கருதப்பட்டு, ஆங்கில மொழியை அண்டிப் புது வளர்ச்சி மட்டுமே பெறும் நிலையடைந்துவிட்டன. பிற தென்மொழிகள் தமிழின் வேருகியுள்ளன. தமிழ் உலகின் ஒரே உயர் தனிச் செம்மொழி என்ற நிலையும் தென்திசை முழுதும் நேரடியாகக் கலையாட்சி செய்த மொழி என்ற நிலையும் இழந்தது. அதன் சொற்களில் பல நூறு ஆரியச் சொற்களாகவும், அதன் கலை ஏடுகள் ஆரிய ஏடுகளின் பெயர்ப்புக்களாகவும் கருதப்படத் தொடங்கிவிட்டன. நல்ல காலம் சங்க இலக்கிய வெளியீடுகளே-அழிந்து போயின; போக எஞ்சியவையே-இன்று தமிழின் பழய தனி நிலையும் உயர் நிலையும் நினைவூட்டுவனவாய் உள்ளன.

சமஸ்கிருத மாயை தமிழினமாகிய கதிரவனிடமிருந்து தான் அரைகுறையாக ஏற்ற ஒளி நிலவை உலகில் பரப்பி, 19-ம் நூற்ருண்டிலிருந்து மேலை நாட்டிலும் புகழாதிக்கம் பரப்பி வந்துள்ளது. ஆயினும் மேனுட்டார் கண்டு இன்று பாராட்டுவது நிலவை! வான்கோழி யழகை! கதிரவனொளியாகவும் மயிலழகாகவும் உள்ளதமிழ் அவ்விடம் பெறும் நாள் அணுகி வருகிறது.

சமஸ்கிருதத்துக்குத் தமிழ் கொடுத்த சொற்கள் போக மீந்த பிற பழஞ் சொற்களையே நாம் தனித் தமிழ் என்கிருேம். அவையே இன்று உலக மொழிகள் எல்லாவற்றுடனும் போட்டியிடும் வல்லமையைத் தமிழுக்கு அளிக்கவல்லன ஆகின்றன. முழுச் சொல்வளமும் பண்பும் கலை இயற் பண்பும் தனதாகக் கொண்டு தன்னியல்பு, தன்னுரிமை. தற்பண்புடன் தமிழ் வளரத் தொடங்கும் நாளில் அது புதிய தமிழகம், புதிய தென்னகமல்ல-புதிய கீழ் திசை, புதிய உலகமே ஆக்கிவிடுவது உறுதி.

தமிழ் ஆதிக்கம் என்ற பகலொளிக்குப் பின் வந்த உலக இரவின் இருட்காலப் பிறை நிலவொளியே சமஸ்கிருதம். அதன் சொற்களில் நூற்றுக்கு 20 விழுக்காடுகூடத் தனி ஆரியச் சொற்களல்ல. அது தெளியப்படும் நாளில் சமஸ்கிருதத்திலும் உலகின் பல பிற மொழிகளிலும் உள்ள கலை, நாகரிக, சமய, தத்துவ, இயல் நூற் சொற்கள் யாவும் தமிழ் மூல வேர் உடையன என்பது இனிது விளங்கும் என்று கூறலாம். ★

தி. மு. க. தலைமைச் செயற்குழு பொதுக்குழுக் கூட்டங்கள்

நாட்கள் ஒத்திவைப்பு.

மே திங்கள் 7, 8 [illegible] (ஞாயிறு) ஆகிய நாட்களில் நடைபெறவிருந்த தலைமைச் [illegible] பொதுக்குழுக் கூட்டங்கள்

1960 ஜூன் 18, 19 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களில், சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் (பவானி அருகில்) நடைபெறும்.

அறிவகம், சென்னை-13
21-4-'60.

தலைமைக் கழகம்
(தி. மு. க.)

இலட்சிய நாடக மன்றத்தாரின் புதிய நாடகம்.

சென்னை இலட்சிய நாடக மன்றத்தாரின் மதுரை - சங்கையா எழுதியுள்ள "உலகம் தெரியாதவன்" என்ற முதல் நாடகம் 23-4-60-ந் தேதியன்று கண்ணனூர் திறந்த வெளியரங்கில் அரங்கேறியது.

இதே நாடகம் 25-4-60-ந் தேதி கள்ளிக்கோட்டை டவுன்ஹாலில் நடைபெற்றது. இந்நாடகத்தில் எம். பால்ராசு, பொதும்பு-முருகன், சிவகெங்கை மணி, அழகாபுரி-சக்திவேல், கரூர்-சிங்காரம், கோவை-மூர்த்தி, எம். எம். இராமச்சந்திரன் ஆகியோர் சிறப்பாக நடித்தனர். இந்நாடகத்தின் பாடல்களை அழகாபுரி-சக்திவேல் இயற்ற டி. எம். தங்கப்பன் இசையமைத்திருந்தார். இதன் தயாரிப்பாளர் எம். பால்ராஜ் இன்னும் பல புதிய நாடகங்களை அரங்கேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிருர். வளர்க இலட்சிய நாடக மன்றம் என்று வாழ்த்துகிருேம்.

ஐயம் அகற்று

இ. உதயனன், சென்னை-23.

யாப்பியலில் 'இழைபு' என்பதற்குப் பொருளும் விளக்கமும் உணர்த்தும்படி தங்களை வேண்டிக் கொள்ளுகின்றேன். உங்கள் பதிலறிய ஆவல்.

தொல்காப்பியம் செய்யுளியல் 240-வது சூத்திரம் இழைபின் இலக்கணம் கூறுகிறது. வண்ணம் வனப்பு என்ற செய்யுள் அமைதிகளுள் இது எட்டு வகை வனப்பின் பாற் பட்டது. இரட்டித்த வல்லெழுத்து வராமல் இரண்டு முதல் ஐந்தடி வரையுள்ள பாட்டுக்களாக அமைந்த இன்னேசையுடைய பாவேடு இழைப்பு எனப்படும்.

தொல்காப்பியர் காலத்திலிருந்த வகுப்பு முறையைத் தொல்காப்பியர் சூத்திர அளவில்மட்டும் நாம் சிறிது காணக்கூடுமேயன்றி, அதன் விளக்கத்தை மற்ற இலக்கணங்களில் காணுதல் இயலாது. அதற்குரியனவாக, எடுத்துக் காட்டக்கூடிய சான்றுகளையுடைய இலக்கியமும் எதுவும இல்லை. சங்க மரபு பிற்காலங்களில் எவ்வளவு மறக்கப்பட்டதோ, அவ்வளவு நம்மிடம் வந்துள்ள சங்கப் பாடல்கள் பாடப்பட்ட காலத்துக்குள் தொல்காப்பிய மரபுகளும் முற்றிலும் வழக்கொழிந்து மறக்கப் பட்டுவிட்டன.

முத்தமிழ் மரபு, தொல்காப்பியக் கால இலக்கண மரபு, தொல்காப்பிய கால இலக்கிய மரபு, சங்க இலக்கிய மரபு ஆகிய யாவற்றையும் தமிழர் ஆட்சி பண்பு, பேரரசு பண்பு, கடலாட்சி பண்பு, வாணிசத் தொழிற் பண்பு ஆகிய யாவற்றையும் படிப்படியாகத் தமிழன் கைவிட்டாலும், தமிழ் மொழியைமட்டும் இனறு வரை விடாமல் கைப்பிடித்து வந்துள்ளான். நம் காலத்தில் மறந்துவிட்ட பண்புகளையும் ஆய்ந்து காணவும், கூடுமானவரை புதுப்பிக்கவும மறுமலர்சசித் தமிழர் முனைந்துள்ளனர்; முனைந்து வருகின்றனர்.

★

கீசி. இரத்தினசாமி,
கொரடாச்சேரி.

"போகர் ஏழாயிரம்" என்று ஓர் நூல் இருக்கின்றது. அந்நூல் தமிழ் மரபுக்கு ஒத்திருக்குமா?

நாம் படித்தறிய வேண்டிய நூலா? விளக்குக.

தமிழ்ச் சித்தர் பதினெண்மர் என்பது மரபு. போகர்அவர்களுள் ஒருவர் என்பது உண்மை. சித்தர்கள் பெயரால் மருத்துவ ஏடுகள் பலவும் பிற கருத்தேடுகள் பலவும் இயங்குகின்றன. சித்தர்கள் காலம் எது, இன்றுள்ள ஏடுகளில் எவை மூலச் சித்தர்கள் இயற்றியவை, எவை அம்மரபில் வந்தவை அல்லது திரிபுற்றவை, அல்லது பிற்காலத்தவை என்று பிரித்தறியக் கூடவில்லை. ஆனால் இன்று நிலவும் ஏடுகளின் நடையும் கருத்துக்களும் ஒரு தனிச் சித்தர் மரபுக்குரியவை என்று கூறுவதில் தடை இருக்க முடியாது. போகர்போன்ற சிததர் பெயர்களால் வழங்கும் ஏடுகள் பலவற்றில் பொதுவான சித்தர் மரபுக்குரிய நடையும் கருத்துப் பாங்கும் மட்டுமன்றி, அவ்வச் சித்தர்களுக்குரிய தனிப் பாங்கும் தெளிவாகக் காணக் கிடக்கின்றன.

எடுத்துக் காட்டாகத் தேரையரிடம் நாம் நோயற்ற வாழ்வு, சாவா இளமை ஆகிய குறிக்கோள்களை வலியுறவு பெறக் காண்கிறோம். போகர் என்பவரிடம் இயற்கை ஆற்றல்களை இன்றைய இயல் நூல் (Science) போல வென்ருளும் வகைகள்பற்றிய பல குறிப்புக்களைக் காண்கிறோம். கண்ணுடி செய்தல், இயங்கு பொறிகள் பலபற்றி அவர் குறிப்பிடுவதாகத் தெரிய வருகிறது.

பண்டு இயல் நூலே இருந்திருக்க முடியாது என்பது இன்றைய ஆங்கிலப் படிப்பாளரின் புது மூட நம்பிக்கையாக இருக்கிறது. ஆனல் இது வரலாறு, சிறப்பாக, கீழ் திசை மேல் திசைப் பண்டைய வரலாற்ருராய்ச்சித் தொடர்பின்மையின் விளைவுமட்டுமே. இந்திய விஞ்ஞானிகளுள் முனைவர் பி. சி. ரே சமஸ்கிருத அறிவும் உடையவர். அவர் முயன்று 'இந்தியர்களின் இயைபியலறிவு' என்ற நூலால் சமஸ்கிருத இயல் நூலின விரிவு காட்டியுள்ளார். சமஸ்கிருதவான நூல், கணித நூல்பற்றியும் மேலை ஆராய்ச்சிகள விளக்கம் தந்துள்ளன. கி. பி. 1000 லிருந்து 1500 வரை உலகின் சிறந்த விஞ்ஞானிகள் அராபியர்களும் ஸ்பானிய முஸ்லிம்களுமேயாவர். அதறகுமுன் கி. பி. 1-ம் நூற்ருண்டிலிருந்து ஆயிர ஆண்டுகள சமஸ்கிருத விஞ்ஞானிகளே உலகின் தலை சிறந்த இயல நூலறிஞர்களாயிருநதனர். அதற்கும் முற்படத் திராவிட இந்தியாவின அறிஞர் பொதுவாகவும் தமிழ்ச் சித்தர் சிறப்பாகவும் கிரேக்கரும, எகிப்தியரும், பாபிலோனியரும் உலகில் இயல் நூல் ஆராய்ச்சியறிவு பரப்பினர்.

இயல் நூலாராய்ச்சிபற்றிய வரலாற்றேடுகள் பல மேலை நாடுகளில் இன்று விளக்கமாக எழுதப்பட்டு வருகின்றன. தமிழக, திராவிட இயல நூலறிவு தவிர, அதனுடனிணைந்த மற்றப் பழய எகிப்திய, பாபிலோனிய கிரேக்க விஞ்ஞான அறிவுகள்பற்றியெல்லாம் விரிவான விளக்கங்கள் இவற்றில் தரப்பட்டுள்ளன. தமிழ் நாகரிகம்பற்றிய ஆராய்ச்சி தமிழகத்திலோ உலகிலோ இன்னும் தொடங்கப்படவில்லை. ஆனால் சங்க இலக்கிய ஆராய்ச்சியுடனும் உலகப் பொது ஆராய்ச்சியுடனும் சித்தர் ஏட்டாராய்ச்சியும் சமஸ்கிருத ஆராய்ச்சியும் ஒப்பிட்டுக் காணப்படடால், திராவிட, தமிழ் அறிவு நூல் நிலைபற்றி நமக்குப் பல செய்திகள் இனி கிட்டலாம். திராவிட தமிழ் தேசிய வளர்ச்சியின் ஒரு பகுதியாக மட்டுமே இது இயல முடியும்.

தாங்கள் குறிப்பிட்ட போகர் ஏழாயிரம் போகர் புதுமைச் சுவடுடைய தாயின் இவ்வழி பயன்படலாம்.

மு. ஏ. சாம்பசிவம்,
ஆண்டர்சன்பேட்டை,

உலகம் என்பது, "லோகம்" என்ற வடமொழிச் சொல்லின் திரிபு என்றும், லோகம் என்ற வட சொல், "பார்க்கப்படுவது" எனப் பொருள்படும் என்றும், ஒருவர் திருக்குறளுக்கு பொருள் விரிக்கும் பொழுது குறித்துள்ளார்கள்! இக்கூற்றிற்குத் தாங்கள் விளக்கம் வேண்டும். நிற்க, வட சொற்கள் தமிழில் ஆதிக்கம்செலுத்தத் தலைப்பட்ட காலம் யாது?

சமஸ்கிருதத்தில் 'லோகம்' (lokam) என்பதற்கு நேரிடையான வழக்குப் பொருள் 'மக்கள்' என்பதே. அம்மரபில் வந்தஇன்றைய இந்தியில் 'லோக்' (log) என்பது அப்பொருளில் தான் வழங்குகிறது தில்லி மக்கள் சபை அம்மரபிலேயே 'லோக்சபா' என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆனல் தென் தமிழரும் அவர்களிடையே வழங்கும் சமஸ்கிருத புராணங்களும் 'லோகம்' என்பதை 'உலகம்' என்ற பொருளில் வழங்குகின்றன.

இந்தச் சொல் மட்டுமன்று: அவசரம், உபன்னியாசம், ஆக்கியானம், பிரசங்கம் முதலிய பல சொறகள் தமிழிலும் தமிழகத்திலும் அதன் மிகப் பழம் பொருளிலும், சமஸ்கிருத இலக்கிய காலத்தில் இடைக்காலப் பொருளிலும், தற்கால இந்தியத் தாய் மொழிகளில் பிற்காலப் பொருளிலும் வழங்கப்படுவது காணலாம். எடுத்துக் காட்டாக 'அவசரம்' என்பதன் தமிழ் மரபுப் பொருள் 'விரைவு' என்பது. 'சர்' என்ற சமஸ்கிருத வேர் மூலத்தின் குறிப்பே இது. சமஸ்கிருத இலக்கிய காலத்திலும் இன்றையப் பிற தாய் மொழிகளிலும் வழங்கும் பொருள் 'வேளை', 'தறுவாய்' என்பது.

சமஸ்கிருதச் சொற்களின் பொருள் மூலத்தைத் தமிழில்தான் காண வேண்டும் என்பதை இங்கிலே சுட்டிக் காட்டும்.

நீர், நிலயம், மீன் என்ற சொற்களைப்போலவே, உலகமும் தமிழ்ச் சொல் தானென்றும், தமிழிலிருந்து முற்காலத்தில் நேரடியாகவோ, இடைக் காலத்தில் பிற திராவிட அல்லது வேறின மொழிகள் மூலமாகவோ இச்சொற்களைச் சமஸ்கிருதம் கடன் வாங்கி ஆண்டுகொண்டதென்றுமே மிக மிகப் பெரும்பான்மையான மொழியறிஞர், மிக மிகப் பெரும்பான்மையான தென்னக, வடதிசை, உலகப் பேரறிஞர் யாவரும் கூறுகின்றனர்.

தமிழில் 'உலகம்' என்ற சொல் முற்றிலும் நிலத்தையும் குறிக்காது. முற்றிலும் மக்களையும் குறிக்காது. மக்களும் உயிர்களும் வாழ்வதற்கிடமான வாழ்க்கைப் பரப்பு அல்லது வாழ்க்கை, அல்லது வாழ்க்கைப் பண்பையே குறிக்கும். அதன் வழக்கு மரபு ஆங்கிலத்தில் அதற்கிணையான சொல் (World) வழங்கும் மரபு. ஆங்கில ம[...] நாமும் தமிழில் மக்க[...] (Human World), உ[...] (Animal World) [...] (Plant World), விண்ம[...] (World of Stars) என்று கூ[...] நடைபெறுதல் என்ற பொரு[...] 'உலவுதல்' என்பதே 'உல[...] என்ற சொல்லின் சொல்மூலமும் பொருள் மூலமும் ஆகும்.

தமிழ் 'உலகம்'தான் 'லோகம்' என்ற சமஸ்கிருதச் சொல்லாகத் திரிந்தது என்று சொல்வதுவே பொருத்தமானது. ஏனெனில் தமிழ்ச் சொல்லுடன்தான் தமிழ்ப் பொருள் மரபு சமஸ்கிருதத்தில் ஏறியிருகக முடியும்.

'லோகம்' தமிழிலிருந்து வரவில்லை என்று கூறுபவர் கொள்கைக்கு, மூல ஆரிய (இந்து ஐரோப்பிய) இனக்குழு மொழி ஆராயச்சி துணை தரவில்லை. தமிழினத்துடன்அணுக்கத் தொடர்புடைய சமஸ்கிருதம் ஒன்று தவிர வேறெந்த ஆரிய மொழியிலும் 'உலகம்' என்ற பொருளில் அச் சொல் கிடையாது. தாம் குறிப்பிடட ஆராய்ச்சியாளர் குறித்த சமஸ்கிருத வேர்ச் சொற் பொருளான பார் (ஆங்கிலம்-look) என்பது தான் ஒரு சிலவற்றிலேனும் உண்டு. அது கூடச் சமஸ்கிருதத்தில் பார் என்பதற்குப் பெரு வழககு, பொது வழக்கல்ல. பிற (திருக்-பச்ய என்பது போன்ற) வேர்ச் சொற்கள்தான் பெருகலாக வழங்குவன.

தமிழ் 'உலகம்' 'உலகு' முதலில் வாழ்க்கைக் குழுவையும் பின் அதன் பெருங்குழுவான மனித இனத்தையும் அதன் வாழ்களமான நிலவுலகையும், இறுதியில் தொல்காப்பியர் காலத்துக்குள்ளாகவே தலைசிறந்த இனப் பண்பாளர் அல்லது இனத் தலைவர் அல்லது சமுதாயப் பெரியார் ('உயர்ந்தோர்' சான்றோர்') என்ற பொருளையும் அடைந்திருந்தது. உலகு என்பது உண்மையான தமிழ்ச் சொல்; அதாவது தனித் தமிழ்ச் சொல் மட்டுமல்ல அது தமிழர் உருவாக்கிய கருத்துப் படிவத்தை உட்பொதிந்த உயிர்த் தமிழ்ச் சொற்களில் ஒன்ருகும்.

கேள்வியின் கடைசி வரி ஒரு தனிக் கேள்வி ஆகும். வடசொற்கள் தமிழில் ஆதிககம் செலுத்தத் தொடங்கிய காலம் யாது? என்ற கேள்வியில் தாங்கள் சமஸ்கிருதச் சொற்களையே வட சொற்கள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள என்று நினைக்கிறேன். சமஸ்கிருதம் ஒரு செயற்கையான மொழி, 'இந்திய' மாநிலத்தில், திட்டவட்டமாகக கூறினல் கங்கைக் கரையிலும் பாலாற்றின் கரையிலுமே பிறந்து உருவாகி வளர்ந்த மொழி. கருவிலிருந்த காலம் கி. பி. 1 முதல் 5-ம் நூறருண்டுவரை ஆகும். இலக்கிய உருவில் கட்டிளமைக் காலம் 5 முதல் 9-வரை ஆகும். முதுமைத் தளர்ச்சிக் காலம் 9-முதல் இன்று வரை எனனலாம். இவ்வளவு காலத்திலும் அது உயிருள்ள மொழியல்ல, இலக்கிய மொழியே; இயற்கை மொழியல்ல, செயற்கை மொழியே. ஆனல் உயிரில்லாத நிலையிலும் முதுமைத் தளர்ச்சி கடந்தும் இன்று அது உலகில் புதுப் புகழ் வாழ்வும், ஆதிக்கமும் செலுத்தி வருகிறது. அந்த ஆதிக்கம் தமிழகம் தவிர எங்கும்-புகழுருவில் மேலைநாடுகளில்கூடப் பெருகியே வருகிறது.

— 10-ம் பக்கம் —

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்.

விந்திய எல்லையில் வெங்களம் காண்போம்!

(நேரிசையாசிரியப்பா)

திராவிட நாட்டீர்! திராவிட நாட்டீர்!
அராவிட மனைய அயல்மொழி இந்தியை
அரியணை ஏற்றி ஆட்சி புரிந்திட
நரியன்ன நெஞ்சினர் நாளும் துடிக்கிறார்!
அறுபத் தைந்தாம் ஆண்டு முதலாய்
சிறுபுத்தி யாளர்தம் தீய இந்தியை
நாட்டிடை அரசில் நாட்டவும் வடவர்
வேட்டைக் காடாய்த் திராவிடம் விளங்கவும்
வடுகு கன்னட மாத்தமிழ் மொழியினர்
ஒடுங்கி அரசியல் ஊமையர் ஆகுவர்!
இந்தி தாய்மொழி வடவருக் கெளிது!
செந்தமிழ் மாந்தர் தேரு அயல்மொழி!
இந்தியா முழுதும் ஏகாதி பத்தியம்
அந்தோ வடவர் இந்தியோ டாங்கிலம்
கற்றுற் போதும். கவின்மிகு வாழ்வு
பெற்றார் வடவர் பெரிது!! பெரிது!!
உலக வாணிபம் அறிவியல் ஒருங்கே
நிலைபெறும் வடக்கே! நீண்ட இந்தியா
கீழ்கடல் மேல்கடல் தென்திசைக் குமரி
தாழ்வுறும் அந்தோ விந்தியம் வரையிலும்
வடவருக் கிணையாய் வாழ்வு வேண்டினால்
படமுடி யாத பாடு பட்டுத்
தாய்மொழி யுடனே தளரா இருமொழி
வாய்வரக் கைவர மாய்தல் வேண்டும்!
இம்மொழி மூன்றும் இளைஞர் தலையில்
வெம்மொழி யாளர் வீழ்த்து கின்றார்
கற்று முடிக்கக் காலம் எத்துணை!
பெற்றார் கொடுக்கும் செல்வம் எத்துணை!
வாய்ப்புப் பெற்று வாழ்வோர் எத்துணை!
ஏய்க்கும் வடவர் ஏகாதி பத்தியம்
நிலையாய்த் திராவிட நாட்டில் நிலைத்திட
விலையோ தருவீர்? வெம்போர் மறவரே!
இந்தியை வீழ்த்திச் செந்தமிழ் காக்க
முந்தி வாரீர்! வாரீர்!
விந்திய எல்லையில் வெங்களம் காணவே.

—அருப்புக்கோட்டை
எம். எஸ். இராமசாமி.

நண்பர்கட்கு!

பொதுக்கூட்டங்களில் என்னைக் கண்டு தேதி வாங்குகிற தோழர்கள், அலுவலகத்திற்கு எழுதி அத்தேதிகளை உறுதி செய்துகொள்ள வேண்டுகிறேன். அவ்வாறு உறுதி செய்து கொள்ளாது, கூட்டங்களில் கலந்துகொள்வதாக என் பெயரை விளம்பரம் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்,
7-5-'60.

தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்

கழகத்தின் எல்லா அமைப்புகளுக்குமான தேர்தல் நடைபெற வேண்டிய முறைகள், கிளைகள், உறுப்பினர், தேர்தல் ஆணையாளர், வேட்பாளர் (அபேட்சகர்) ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத்தாள் போன்ற விவரங்கள் அடங்கிய

தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்

எனும் தலைமைக் கழக வெளியீடு விற்பனைக்குத் தயாராகிவிட்டது.

தனிப்படி விலை 12 காசுகள்!
அஞ்சல் செலவு தனி!

இடைக்குமிடம் :
தி. மு. க. தலைமை நிலையம், அறிவகம், சென்னை-13.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

வளர்ச்சியையே விரும்புகிறவன் என்ற முறையில் இந்தக் குறைகள் என்னைக் குறைத்துவிடமாட்டா. இரண்டு கைகளையும் விரித்து வைத்துக்கொண்டு, வருவது பணமானாலும் பதவியானாலும் வந்தபடியே போய் விடட்டும் என்றிருப்பவன் நான், காந்தியைப்போன்ற பெரிய தலைவர்களுக்கே ஆசாபாசங்களும் கோபதாபங்களும் அடிக்கடி வந்திருப்பதைப் பார்க்கிறோம். அவர்களைவிட நான் உயர்ந்தவனல்ல என்றாலும், ஒரு சதவிகிதம் பற்றற்ற உள்ளமுடையவன் என்பதில் நான் பெருமைப்பட நியாயமுண்டு. ஆகவே, நன்கு எடைபோடத் தெரிந்தவர்கள்-அவர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் - என்னுடைய பேச்சுக்களை, கொள்கை உணர்ச்சியில் பேசப்பட்டவை என்றுதான் கொள்வார்கள்.

தோழரே! நான் பல்வேறு கிளைகளை இந்த ஒரு நதியில் இணைக்கிறேன். அதற்காகத்தான் கடிதமெழுதும் முறையை மேற்கொண்டேன் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நிற்க,

நமக்குள் குழப்பம், குழப்பம் என்றல்லவா எதிர்க் கட்சிக்காரர்கள் இதுவரை பேசி வந்தார்கள். வேடிக்கை என்ன தெரியுமா? தமிழ்நாடு காங்கிரசில் இப்போது சகிக்கமுடியாத குழப்பம் ஏற்பட்டிருக்கிறதாம். அளகேசனை ஏன் தலைவராக்கினோம் என்று காமராசர் வருத்தப்படுகிறாராம். ஒரு ஊழியர் கூட்டத்தில் காமராசர் பேசும்போது, 'தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் என்று கையெழுத்துப் போட்டு அறிக்கை விட்டால் மட்டும் போதாது; மக்களிடம் தொடர்பும் கொள்ளவேண்டும்' என்றாராம். போலீசு அமைச்சர் பக்தவத்சலம் அளகேசனைக் கூப்பிட்டு சாக்கிரதையாக நடந்துகொள்ளச் சொன்னாராம். காமராசரை மீறிப்போனால் பதவி நிலைக்காது என்று அளகேசன் எச்சரிக்கப்பட்டாராம். அடுத்த தேர்தலில் தங்களை அபேட்சகராகப் போடாவிட்டால் சுதந்திராக் கட்சிக்குப் போய்விடுவது என்று இப்போதிருக்கிற காங்கிரசு எம். எல். ஏ.க்கள் முடிவுகட்டியிருக்கிறார்களாம். தேர்தல் நெருங்க, நெருங்க, சிதறுண்ட தேங்காய்போல் காங்கிரசு உடைந்துவிடும் நிலை ஏற்பட்டு வருகிறது. அதை மறைப்பதற்குத்தான் ஆயிரம் ''மாய வித்தைகள்'' மேடைகளிலே செய்யப்படுகின்றன. காமராசரைப் பற்றி என்னதான் குறைகூறப்பட்டபோதிலும் காங்கிரசுக் கட்சியின் உட்குழப்பங்களில் எப்போதும் காமராசரின் கையே மேலோங்கி நின்றிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அவரது உழைப்பும் உறுதிப்பாடும் அவருக்குப் பெருந்துணை புரிந்திருக்கின்றன. சொந்த வாழ்க்கையில் பற்றற்றவர், பிள்ளை குட்டி என்ற கவலை இல்லாதவர், அரசியலைத் தவிர வேறு நோக்கங்கள் இல்லாதவர் என்ற முறையில் அவர் காங்கிரசுக்காரர்களாலே மதிக்கப்படுகிறார். அளகேசன் பதவி துறக்கின்ற நிலையும், அதனாலே சிலர் கோபப்படும் நிலையும் ஏற்பட்டால்கூடக் காமராசர் கலங்கப்போவதில்லை. எப்பொழுதுமே அரசியலில் நிறைவு பெற்றவர்கள் மிகுந்த தைரியத்தோடுதான் இருப்பார்கள். என்ன நான் காமராசரைப் புகழ்கிறேனே என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அப்படி எண்ணினாலும் நியாயந்தான். இன்றையத் தமிழ்நாட்டுக் காங்கிரசின் நடைமுறையை அவர் வெறுப்பதால், அதில் விரைவிலேயே மாற்றங்காண இருப்பதால், நான் அவரைப் புகழ்வதில் நியாயமிருக்கிறது. யாரும் அவரைத் தன் தோளிலே தாங்கிப் பதவிக்குக் கொண்டுவரவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பதவி காமராசரைத் தேடிவந்தது என்று காங்கிரசுக்காரர்கள் சொல்வதை நாம் கேட்கிறோம். ஆகவே, விரைவில் காங்கிரசின் உட்குழப்பம் வளர்ந்து அளகேசன் கும்பல்கள் வெளியேறி, பழையபடியும் காமராசர் புதிய ஆட்களைத் தேடுவார் என்று நாம் எதிர்பார்ப்போமாக!

இன்னொரு வீடு பாழாவதிலே நமக்கென்ன இலாபம்? இருக்கிறது! அந்த வீட்டிலிருந்துதான் அநாகரிகத் தொத்து நோய்கள் அடுத்தடுத்த வீடுகளுக்குப் பரவுகின்றன. ஆகவே, காங்கிரசு என்னும் வீடு இடிந்து நொறுங்கி இடந்தெரியாமல்போவதைத்தான் ஊரிலிருக்கும் எல்லா வீட்டுக்காரர்களும் எதிர்பார்ப்பார்கள். மனமாற்றமடையும் காமராசர் திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றிச் சிந்திக்கின்ற வாய்ப்பும் அப்போது ஏற்படும்.

இந்த நேரத்தில் நாம் கொஞ்சம் பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கவேண்டும். தேர்தலுக்குத் தேவையானது பணம். அந்தப் பணத்தை இப்போதிலிருந்து சேர்த்தாக வேண்டும். அதை எப்படிச் சேர்ப்பது என்று மலைத்துக்கொண்டே உட்கார்ந்துவிட்டால், நாம் எழுந்து நின்று பார்க்கும்போது தேர்தல் வந்து நிற்கும். முறையாக எல்லா வழிகளிலேயும் பணம் திரட்டி எதிரிகளை முறியடித்தாகவேண்டும்: அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல், இப்போதிலிருந்தே உண்டியலைக் குலுக்குங்கள்; உண்டியல்மூலம் பணம் சேர்ப்பதற்கு நமக்கு ஒன்றரை ஆண்டுகள் தேவைதான். இன்றுமுதல் எப்போதும் தேர்தல், அதற்குத் தேவையான பணம் - இரண்டையும் சிந்தியுங்கள். ஒருமித்த கருத்துக்கொண்டு ஒன்றுபட்டுத் தேர்தல் களத்தை நாடுகிறவர்கள் ஒருபோதும் தோல்வியடையமாட்டார்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துவோம்.

அன்பன்,
கண்ணதாசன்

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.